1141

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 6

# கலா நிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ௵ பிப்ரவரி ௴ 13 ௳ [No. 7.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 121
2. அப்பர் (குழலின் ஏற்றம்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 123
3. அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை (ககோள சம்பவம்)
E. N. பத்மாவதி அம்மாள் B. A. 125
4. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 126
5. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A., B.L. 128
6. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 130
7. நம்மாழ்வார் வைபவம் (திருவாய்மொழி)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 132
8. இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் வருகை)
T. S. நடராஜபிள்ளை. B. A., B. L 135
9. வர்த்தமானம் 139

## கலா நிலயம்

### சுயநலச் சோதனை.

### 2

சென்றநாள் செப்பிய காரணகாரிய தொடர்பின் முறையை நினைவிற் கொண்டு நாம், மாநுடச் செயல்களின் நோக்கமும் தன்மையும் முடிவும் எதனை நாடி எவ்வாறியங்கி எதன்பால் எய்துகின்றன என்னும் விடயங்களைச் செவ்விதின் ஆராய்ந்து தேர்தல் வேண்டும். இத்தொடரில் ஒன்றற்கு முன்னும் மற்றதற்குப் பின்னும் சோதிக்க இயலாத இரண்டு எல்லைகள் இருக்கின்றனவென்று கூறினோம். எல்லாச் செய்கைகளுக்கும் அடிப்படையான மூலநோக்கமே முதல் எல்லையாகும். அவ்வாறே, எல்லாச் செய்கைகளுக்கும் முடிவாய் அமையவல்ல பயனே மற்ற எல்லையாகும். இவ்விரண்டிற்கும் இடையே நிற்பனவை முன்னதற்குக் காரணமாயும் பின்னதன் காரியமாயும் சம்பந்தித்துநிற்கின்ற வினையங்களாவதையும் விளக்கியுள்ளோம்.

இடைநிகழும் பல்வேறு காரியங்களும் அவைகளுக்குக் காரணமா யமைகின்றவைகளும் பலதிறப்பட்டனவாய்த் தென்படினும், மனிதர் மனமொழி மெய்களாற் புரிகின்ற செயல்களனைத்திற்கும் பொதுவாயமைந்த மூலகாரணம் ஒன்றே—முடிவாக எய்தப் பெறும் பயனுமொன்றே. இழுக்கிலாது வாழ்க்கை ஒழுகுதற்கு மாந்தர் தெள்ளிதி னறியவேண்டிய இம் முதற்காரணத்தையும் முடிவுப்பயனையும் இங்கு நாம் எடுத்து விளக்குவதன்முன் இடைநிகழும் செய்திகளின் சிலவற்றைச் சோதிப்பது நலம். சோதித்து இவைகளிருந்து எய்தும் உண்மையை ஆதாரமாகக் கொண்டு, முதல் முடிவு என்னும் ஈரெல்லையை உணர முயலின் அம்முயற்சி கைகூடுவது எளியதாகும்.

மனிதர் மன மொழி மெய்களாற் புரிகின்ற செயல்களிற் சிலவற்றை நற்செயல்களென்றும், சிலவற்றைத் தீச்செயல்களென்றும் பிரித்திருக்கின்றனர் மேலோர். நல்லதும் தீதுமற்ற சிலசெயல்கள்இருக்கின்றவென்று எண்ணுவாருமுளர். காரண காரியத்தொடரில் அது பெற்றுள இடத்திற்குத் தக்கவாறு இத்தகைய ஒரு செய்கை நன்மை தீமையென்று மதித்துக் கருதவேண்டி நேரும். எனினும் இதனைப்பற்றிய ஆராய்ச்சி இக்கட்டுரையின் கருத்திற்கு அவசியமில்லையாகையால், பின்னொரு செவ்விநோக்கி நிறுத்திக் கொள்ளலாம். மற்று, சாஸ்திரங்களும் சமய நூல்களும் விதித்திருப்பதால் ஒரு கருமம் நல்லதென்றும், விலக்கியிருத்தலால் ஒரு கருமம் தீதென்றும் ஆகின்றனவோ, அல்லது நல்லதும் தீதுமாய் இருப்பதாற்றான் சாஸ்திரங்களும் சமயநூல்களும் இவைகளை விதிக்கவும் விலக்கவும் நேர்ந்தனவோ என்ற சங்கையையும் இங்குப் பாராட்டி நாம் பரிசோதிக்க வேண்டிய அவசியம் இல்லை. என்னின், எல்லோராலும் ஒருமனதாய் நன்மையென்றும் தீமையென்றும் கருதப்பெறுகின்ற கருமங்களின் தன்மையையே பற்றியினி வரையலாகின்றோம். இதுவுமன்றித் தற்போது நமக்கு அவசியமாகின்ற ஆராச்சியின் எல்லையை வரையறுத்துக் கொள்வதற்கு, கற்பு வாய்மை பொறை முதலிய நிலைகளைப்பற்றிய செய்திகளும் இங்கு விலக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பல செயல்களைத் தூண்டுதற்கு நிமித்தங்களாகலாமெனினும் தம்வரையில் செயல்களாகாது நிலைகளாகவே கருதுதற்கு ஒத்தனவாகலின், இப்பொழுது நாம் விளக்கவரும் விஷ

யம் தெளிவுறத் தொடரும்பொருட்டு இவைகளையும் வேறுபிரித்து வைத்துவிடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அவ்வாறே, அவரவர் கடமையை முன்னிட்டு அக்கடமையின் பொருட்டே பயனை எதிர் நோக்காது இயற்ற வேண்டலாகின்ற நிஷ்காம்ய கருமத்தின் தத்துவத்தையும் தற்காலம் இக்கட்டுரை தன்னுட்கொண்டிலது. ஆதலின், நற்செயல் தீச்செயல் என உலகநடையில் வழங்கிவருகின்ற செய்கைகளின் உண்மையை முதலில் பார்ப்போம்.

ஒருவன் நன்மை அல்லது தீமை செய்தான், செய்கிறான் செய்வான் என்னும் வாக்கியம் அமைப்பளவில் ஐயமற்றதுபோலிருக்கின்றதெனினும், அதன் பொருளைத் தேர்ந்துகொள்வதற்கு ஒரு சிறிது ஆராய்ச்சிவேண்டும். ஏனெனில், தச்சன் பெட்டியைச் செய்தான் என்பதற்கிணையாக ஒருவன் நன்மை தீமைகள் செய்வதை இயம்ப இயலாது. செய்கையின் பயனாய செயப்படுபொருள் எய்திவிட்ட இறந்த காலத்தில் மாத்திரமே தச்சன் பெட்டி செய்தான் என்பதும், ஒருவன் நன்மை அல்லது தீமை செய்தான் என்பதும் ஒக்கும். நிகழ்விலும் எதிர்விலும் இது பெரும்பான்மை பொருந்தாது. ஏனெனில், பெட்டி செய்துகொண்டிருக்கின்ற ஒரு தச்சனைக் குறித்து "இத்தச்சன் பெட்டி செய்கிறான்" என்போமெனின் அவ்வாக்கியம் செய்யப்படும் பொருளளவில் பிழைத்திடாது. திறமையற்ற தச்சனாயின் முடிவில் பெட்டிசெய்து தீராமல் போயினும் போகலாமே யொழிய அவன் பிசாசொன்றைப் படைத்தவனாக மாட்டான் என்பது வெளிப்படை. ஆகையால் பெட்டி யொன்று செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு தச்சன் மரத்தில் வேலைசெய்துகொண்டிருக்கும்வரையில் அவன் 'பெட்டி செய்கிறான்' என்று சொல்லிவருவது முழுவதும் உண்மையான வாக்கியம். இறுதியில் பலகை யெல்லாம்முறிந்து பெட்டி உருப்பெறுமற்போயினும் "இத்தச்சன் பெட்டி செய்திலன்" எனக்கூறலாகுமேயன்றி, வேறொன்று செய்தான் என்பதற்கில்லையே. இதற்கெதிராக "ஒருவன் நன்மை செய்கின்றான்" என்னும் வாக்கியமொன்றின் சரிதத்தைப் பார்ப்போம் வேதனையுற்றலறும் நோயாளியைக் கண்டொருவன் மிகஇரங்கித் தன்மனைசென்று மருந்து கொணருங்கால் இவனை நோக்கி "இவன் நன்மை செய்கின்றான்" என்றுரைப்பது இயற்கையே. நிகழ்காலத்தளவில் இவ்வாக்கியம் நேராகவே நிற்கின்றது. மற்று இவன் கொணர்ந்து கொடுத்தது கைத்தவறால் மருந்திற்குப்பதிலாக விடமாயிருக்க அந்நோயாளி அருந்தியவுடன் இறந்தானெனின், "இவன் நன்மை செய்தான்" என்று இயம்பத்துணிவார் இலர். இன் செய்தது தீமையே; ஆதலின் 'நன்மை செய்கின்றான்' என்று நிகழ் காலத்தில் நடந்தவொரு வாக்கியம் இறந்த காலத்தில் 'தீமைசெய்தான்' என்று மாறவேண்டி நேர்கின்றதே. கொடுத்தது நஞ்சாலும் அதனை மருந்தென்று எண்ணிக்கொடுக்கும்போது அவன் "தீமைசெய்கின்றான்" என்று செப்புவதும் அமையாது எனவே, இறந்தகாலத்தில் 'நன்மைசெய்தா' னென்றேனும், நிகழ்காலத்தில் 'தீமைசெய்கின்று' னென்றேனும் சொல்வதற்கியலாத வொரு நிகழ்ச்சி யிது. "நன்மை செய்தான், ஆனால், அது தீமையாய் முடிந்தது" என்று லாகாதோ என நினைப்பதும் நேரிதன்று. நன்மை தீமையாய் முடிந்தது என்று விளையும் மூரண் வெளிப்படை. "நன்மைசெய்யக் கருதினான்; அது தீமையாய் முடிந்தது" என்றாலோ வெனின் இது விரிவுரை, வாக்கியத்தின் அர்த்தமன்று. இதனில் இறந்த காலமானது 'கருதுதல்' என்பதே யன்றிச் 'செய்தல்', அன்றென்பதையும் உணர்தல்வேண்டும். உணர்ந்தக்கால் இவ்வுதாரணத்திலிருந்து ஒன்றுபுலப்படும். அருந்துவது மருந்தென்று நினைத்தபடி யில்லாது விடமேயா யிருப்பினும், 'நன்மை செய்கின்றான்' என்பதற்குப் பதிலாய், "நற்செயல் செய்கின்றான்" என்று அச்செய்கையைக் குறிப்போமாயின், தீமையே எய்தியதேனும் இவ்வாக்கியத்தினுள் அடங்கிய உண்மை மாறுமலிருக்கின்றது. நோய்களையுங் கருத்துடைய செய்கை நற்செய்கையே.

எனின், நன்மை செய்வது என்பது வேறு, நற்செயல் செய்வது என்பது வேறு. நற்செயல்கள் செய்வதால் நன்மையே செய்யப்படுவதாகப் பெரும்பாலும் நேரலாம் எனினும், செய்கின்ற நற்செயல்களெல்லாம் நன்மையுமாகத்தான் இருக்கவேண்டுமென்ற நியதியில்லை என்பது இதனால் தெரியவருகின்றது. இவ்வறிவு, வாழ்க்கையின் செம்மைக்கு மிகவும் அவசியம் என்பதைப் பின்னர் விளக்குவோம். இவ்விதமே, தீமைசெய்தல் என்பதற்கும் தீச்செயல் செய்தல் என்பதற்கும் பேதமுளதென்பது உரையாமலே கொள்ளக்கிடக்கின்றது.

தச்சன் பெட்டி செய்வதுபோன்ற செய்கைக்கும், மனிதர் நன்மை தீமைகளைச் செய்வதற்கும் இன்னொரு முக்கியமான வேற்றுமையுளது. தச்சன் பெட்டி செய்தான் என்பதில் செய்பவன் தச்சன், செயப்படுபொருள் பெட்டி. மற்று "ஒருவன் நன்மை அல்லது தீமை செய்தான்" என்னுங்கால், உலக வழக்கில், செய்பவன் அவன், செய்யப்பட்டது நன்மை அல்லது தீமை, என்று கொள்வதோடு பொருள் நிறையவில்லை. இந்நன்மை அல்லது தீமை செய்யப்படுபவனும் ஒருவன் வேண்டும். யாருக்கு நன்மை அல்லது தீமை செய்யப்பட்டது. (அல்லது படுகின்றது, அல்லது படும்) என்ற கேள்வியும் ஒன்று உளதன்றோ! இந்நன்மை அல்லது தீமைக்கு ஆளாவது செய்பவன் தானேயாயினும் ஆகலாம், அல்லது அவனுக்கு அயலான தொன்றாயினும் ஆகலாம். இது யாவரும் அறிந்த விடயமே. எனினும், உலகவழக்கின் வெளித்தோற்றத்தில் பொருந்தியிருப்பதுபோல் இது உண்மையினது ஆழத்தில் அமைபவில்லை. இவன் அவனுக்கு நன்மையைச் செய்தான் அல்லது தீமைசெய்தான் என்பதெல்லாம், செய்பவன் செய்யப்படுவன் என்று வேறு வேறாகத்தோன்றுமிருவரும் அல்லாத மூன்றுமொருவனது மதிப்புரையே யாதல்கூடும். "எனக்கு அவன் நன்மைசெய்தான், தீமைசெய்தான்" என்று செய்யப்பட்டவன் சொல்வதும் எண்ணுவதும் ஒருவகையில் உண்மை யெனத்தகுந்ததாயினும் ஆகலாம். ஆனால் செய்பவன், "நான் அவனுக்கு நன்மை செய்கின்றேன், அல்லது தீமை செய்கின்றேன்" என்று எண்ணுவதிலும் உரைப்பதிலும் ஆழ்ந்து நோக்கின் யாதும் உண்மை இலது. விஷயந் தெரியாமல் மயங்குகின்ற மயக்கமேயன்றி இது வேறன்று. பிறனுக்கு இவன் செய்தது நன்மையேனும் தீமையேனும் அது இடைப்பிறவரல். இருதிறத்திலும் செய்தவன்கருத்து தனக்கு நன்மை செய்து கொள்வதேயாகும். ஆதலின், நற்செயல் ஆயினும் தீச்செயலாயினும் அவன் கருத்து நாடியது நன்மையே யாகையால் அவன் நன்மையே செய்கின்றான் என்னல்வேண்டும். முன்னர்க்காட்டிய வேற்றுமையை நினைவில் வைத்தால், மேல்வாசகம் உலகமலைவு ஆகாது.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

### 3. குழல் அல்லது வேணு (i) குழலின் ஏற்றம்.

நமது தமிழ்நாட்டில் இசைக்கருவிகள் ஐவகையாம். அவையாவன—தோற்கருவி (உ-ம்) பறை போன்றன; நரம்புக்கருவி (உ-ம்) யாழ் போன்றன; உருக்குக்கருவி (உ-ம்) பல உலோகங்களால் வார்ப்படம் செய்த வாத்தியங்கள் போன்றன; மிடற்றுக்கருவி (உ-ம்) கண்டம்; துளைக்கருவி என்பனவாம். அவற்றுள் துளைக்கருவியாவது இயற்கையிலுள்ள ஸ்தாவரப்பொருளை வெட்டித் துளைசெய் திசையெழுப்புவது. அத்தகைய துளைக்கருவிகளுக்குக் குழல் என்பது தமிழில் பொதுப்பெயர்.

105-வதுபக்கத் தொடர்ச்சி.

வீணை *எவ்வாறு பரமசிவத்தின் இசைக்கருவியோ அவ்வாறே குழல் மயோன் இசைக்கருவியாகும்:—

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ! 1

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ! 2

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ! 3

சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை †

இம்மாயோன் செய்கையை, அப்பரும் "குழலூதும் கோவலன்" என்றார்.

தொல்லைவான் சூழ்வினைகள் சூழப் போந்து
  தூற்றியே ஞற்றியே சுடராய் நின்று
வல்லையே யிடர்தீர்த்திங் கடிமை கொண்ட
  வானவர்க்குந் தானவர்க்கும் பெருமான் றன்னை
கோல்லைவாய்க் குருந்தொசிந்து குழலூதும்
  கோவலனு நான்முகனுங் கூடி யெங்கும்
எல்லைகாண் பரியானை யெம்மான் றன்னை
  யேழையே னன்பண் டிகழ்ந்த வாறே

திருவீரட்டானம் - ஏழைத்திருத்தாண்டகம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆனிறை மேய்க்குங்காலை தன் குழலால் சுத்தநாதம் எழுப்பியஞான்று மனிதரும், தேவரும், பண்டிதரும் பாமரரும், பெண்டிரும், மக்களும் மனோலயமடைந்து பேரானந்தத்தில் மூழ்கியது பெரியாழ்வார் திருவாக்கால் 3-ம் பத்தின் 6-ம் திருமொழியாகிய குழலூதற்சிறப்பிற் காணலாகும்.

கோபிகைகள், தம்மலர்க் கூந்தல் விழ, உடை நெகிழ, ஓர்கையாற் றுகில்பற்றி "ஒல்கி யோடரிக்க ணோடும்படி" நிகழ்ந்தது, அன்னார் கண்ணனிடம் வைத்த காமத்தின் வெறியென மாந்தரெண்ணுவரோ என நாணிப் பெரியாழ்வார்,

"மேனகை யோடு திலோத்தமை யரம்பை
  உருப்பசி யவர்வெள்கி மயங்கி
வானகம் படியில் வாய்திறப் பின்றி
  ஆடல் பாடலவை மாறினர் தாமே"

எனவும்,

"நரம்புடை தும்புரு வோடு
  நாரதனுந் தந்தம் வீணைமறந்து
கின்னர மிதுனங்களுந் தம்தம்
  கின்னரம் தொடுகிலோ மென்றனரே"

எனவும்,

"பறவையின் கணங்கள் கூடு துறந்து
  வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
  கவிழ்ந் திறங்கிச் செவியாட்ட கில்லாவே"

எனவும்,

"மருண்டு மான்கணங்கள் மேய்க்கை மறந்து
  மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர
இரண்டு பாடும் துலங்காப் புடைபெயரா
  எழுது சித்திரங்கள் போல நின்றனவே"

எனவும்,

"மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
  மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால்நிறை நின்ற
  பக்கம் நோக்கி யவைசெய்யுங் குணமே"

எனவும், இக்குழலின் இசையின் வன்மையை விளக்கினார். பெரியாழ்வார் பாடியதொன்றும் கற்பனையன்று. குழல், யாதும் செய்ய வல்லதென ஐரோப்பிய புராதனநாகரிகத்திலும் நம்பப்பட்டது. நவீன நாகரிகத்திலும் நம்பாமற் போகவில்லை. (Troy) டிராய் என்னும் மாநகர் (Apollo) அபாலோ வென்னுஞ் சூரியக் கடவுள் இசைத்தகுழலோசையால் மதிற்சுவர்களுடன் பூமியினின்று உருவம்பெற் றெழுந்ததெனக் கிரீக்கர் பெருங்காப்பியங்கள் கூறும். ராபர்ட் பிரௌனிங் (Robert Browning) என்னும் ஆங்கிலக் கவி எழுதிய (Pied Piper of Hamelin) பைட் பைபர் ஆப் ஹாமலின் என்னுஞ் செய்யுட் சரிதையுள், ஹாமலின் நகர வாழ்க்கை நிலைகுலைய உபத்திரவஞ் செய்த எலிகளைக் குழலூதிக் கூட்டங் கூட்டமாய்ப் பின்வரச்செய்து ஒரு குழலோன் அவற்றை ஆற்றில் ஒழித்ததும், இதற்குக் கைம்மாறாகத் தருவதாய் அந் நகரவாசிகள் மொழிந்த பரிசு தாராது வஞ்சித்ததற்கு, அக்குழலோன் வேறுமுறையில் குழலூதி அந்நகரக் குழந்தைகளை மந்தைமந்தையாய்த் தந்தையர் பிரமிக்க ஒரு நொடியில் அழைத்துக்கொண்டு மலையொன்றில் மறைந்த விஷயமும் காணலாகும். ஆகையால் குழலின் இசைவன்மையை நம்பாதாரில்லை.

---

* வேத னைம்மிகு வீணையில் மேவிய
கீத னைக்கிளை ருந்நறுங் கொன்றையம்
போத னைப்புனல் சூழ்தபுத் தூரனை
நாத னைநினைந் தென்மன மையுமே.

திரு அரிசிற்கரைப்புத்தூர்-திருக்குறுந்தொகை 4.

† அரவ மார்த்தன லாடிய வண்ணலை
பரவு வாரவர் பாவம் பறைதற்குக்
குரவை கோத்தவ னுங்குளிர் போதின்மேல்
காவி னன்முக னுங்கரி யல்லரே

சித்தத்தொகை-திருக்குறுந்தொகை 26.

சிவபெருமான் பற்பல வேடங்கள்கொண்டு தரிசனந் தந்து அந்தரத்தில் மறையுங்கால் குழல் ஊதப்படும் என்பர் திருநாவுக்கரசு. குழல், மாயோன் கருவியாதலால், அது தேவனை மாயமாய் மறைவிக்க இன்றியமையாததே போலும்:—

காளங் கடந்ததோர் கண்டத்த
 ராகிக்கண் ணார்கெடில
நாளங் கடிக்கோர் நகரமு
 மாகி நன்கிசைந்த
தாளங்கள் கொண்டுங் குழல்கொண்
 டும்யாழ் கொண்டுந் தாமங்ஙனே
வேடங்கள் கொண்டு விசும்புசெல்
 வாரவர் வீரட்டரே

திருவதிகை - திருவிருத்தம் 7.

ஆடவரை நுண்ணிடையார் மயங்கச் செய்வதும் அவர் குழலனைய மொழியேயாம்:—

மழலை தான்வரச் சொற்றெரி கின்றிலள்
குழலி னேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
யிகழ்வ தோவெனை யென்றுகொ ளென்னுமே

திருக்கழிப்பாலை - திருக்குறுந்தொகை. 3.

குழலை யாழ்மொழி யாரிசை வேட்கையா
லுழலை யாக்கையை யூணு முணர்விலீர்
தழலை நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினோ
மிழலை யானடி சாரவின் ணுள்வரே.

திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை. 6.

குழலினோசைபோல் வண்டுகள் பண்பாடுவதால் நமக்கு இளவேனிற் காலத்தில் சோலைகளில் நித்திரைவரும்*. அதையும் அப்பர் திருவாக்காற் காண்க:—

அழலுமி ழங்கையானே! யரிவையோர் பாகத்தானே!
தழலுமி ழரவமார்த்துத் தலைதனிற் பலிகொள்வானே!
நிழலுமிழ் சோலைசூழ நீள்வரி வண்டினங்கள்
குழலுமிழ் கீதம்பாடும் கோடிகா வுடையகோவே!

திருக்கோடிகா - திருநேரிசை 7.

உமையவள் மொழிகளும் குழலிசை போன்றவெனத் திருநாவுக்கரசு நாயனார் உவமைப்படுத்துகின்றார்:—

† குழல்வலங் கொண்ட சொல்லாள்
 கோலவேற் கண்ணி தன்னைத்
கழல்வலங் கொண்டு நீங்காக்
 கணங்களைக் கண்க ளார
அழல்வலங் கொண்ட கையா
 னருட்கதி ரெறிக்கு மாரூர்
தொழல்வலங் கொண்டல் செய்வான்
 றோன்றினார் தோன்றி னாரே.

திருஆரூர் - திருநேரிசை 1.

பரமன் ஈமக்காட்டிலாடும் திருக்கூத்திற்கும் குழல் ஒரு முக்கிய இசைக்கருவியாகும். அவ்விடயம் அப்பர் தேவாரத்தில் பல செய்யுட்களிற் காணலாகும்:—

குழலோடு கொக்கரை கைத்தாள மொந்தை
 குறட்பூத முன்பாடத் தானா டும்மே
கழலொடு திருவிரலாற் கானஞ் செய்து
 கனவின்கட் டிருவுருவந் தான்காட் டும்மே
எழிலாருந் தோள்வீசி நடமா டும்மே
 யீமப் புறங்காட்டி லேமந் தோறும்
அழலாடு மேயட்ட மூர்த்தி யாமே
 யவனாகி லதிகைவீ ரட்ட னாமே.

திருவதிகை வீரட்டானம்-அடையாளத் திருத்தாண்டகம்.

காடலாற் கருதாதார் கடனஞ் சுண்டார்
 களிற்றுரிவை மெய்போர்த்தார் கலன தாக
ஓடலாற் கருதாதா ரொற்றி யூரா [ணாற்
 றுறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்
பீடலாந் தனைசெய்வார் பிடவ மொந்தை
 குடமுழவம் கொடுகொட்டி குழலு மோங்கப்
பாடலா ராடலார் பைங்க ணேற்றார்
 பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே!

திருப்பந்தணை நல்லூர்-திருத்தாண்டகம் 2.

எனவே, குழல் அஃறிணைப்பொருள்களையும் வயப்படுத்தும், உயர்திணைப் பொருள்களையும் வயப்படுத்தும். மனிதர், தேவர், நாகர் முதலானோர் குழலினிசையி லீடுபட்டதுபோல் பரமனும், தான் குழலெடுத்து வாசியாவிடினும், தன்னைச் சூழும் திருக்கணங்கள் வாசிக்கஅதைக்கேட்டு இன்புறுவரென்பது வெளியாகின்றது. இது மாயோன் இசைக்கருவியானதால் "அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே" யென்றமையால், பரம்பொருளின் ஆதி சக்தியால் பண்ணமைப்பட்ட இவ்விசைக்கருவி, வீணைக்குச் சமமானதென்றும் கொள்ளல் வேண்டும்.

* குழலின்னிசை வண்டின்னிசை கண்டுகுயில்கூவும்
நிழலின்னெழில் தாழ்ந்தபொழில் சூழ்ந்தநின்றியூரில்
அழலின்வல னங்கையது வேந்தியனலாடும்
கழலின்னொலி யாடும்புரி கடவுள்களை கண்ணே.
குழலின்வரி வண்டுமுரன் மெல்லியன போன்மலர்கள் [கொண்டு
கழலின்மிசை யிண்டைபுனை வார்கடவு ளென்றமரர் கூடித்
தொழலும்வழி பாடுமுடை யார்துயரு நோயுமிலராகி
அழலுமழு வேந்துகையி னனுறைவ தவளிவணல் லூரே

சம்பந்தர்.

† குழலை வென்ற மொழிமட வாளையோர் கூறனும்
மழலை யேற்று மணாள னிடந்தட மால்வரைக்
கிழவன் கேழை வழிபழை யாறு கிழையமும்
மிழலை நாட்டு மிழலைவெண் ணிநாட்டு மிழலையே.

சுந்தரர்.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனு மாய—கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தர கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு)

மானேஜர் :—"கலா நிலயம்", 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



# அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை.

3. அப்பர் காலத்திய ககோள சம்பவங்கள்.

அப்பர் காலத்தில், எரிநக்ஷத்திரங்கள் பல ஒரு சமயத்தில் அளவின்றி விழுந்து உலகத்திற்குப் பீதியுண்டாக்கியதென்று அநுமானிக்கத்தக்க பாசுரங்கள் சில அவர் தேவாரத்தில் காணப்படும் சூரியனைச் சுற்றி ஓடும் பூமியின் பாதையில் எரிநக்ஷத்திரங்களானவை கூட்டங் கூட்டமாய்த்தங்கநேரும் சமயங்களைவானசாஸ்திரிகள்வரையறுத்துள்ளார். இதனால் அப்பர், சம்பந்தர் காலங்களைவையென்று வானசாஸ்திர ஆராய்ச்சியாலும் ஒருவாறு அநுமானிக்கலாம். ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) காலத்திலே பகலில் எரிநக்ஷத்திரங்கள் விழுந்ததாயும்அதனால்ஜனங்கள் மிகவும்பயமடைந்து கலங்கியதாகவும், அவ்வரசன் இறப்பதற்கு அவை அறிகுறியான உற்பாதங்களாயிற்றெனவும் ரோமாபுரி சரித்திரத்தில் காண்கின்றோம். இத்தகைய எரிநக்ஷத்திர வீழ்ச்சி(Meteoric Showers) சற்றேறக்குறைய ஐந்து நூற்றாண்டுக்கு ஒருதடவை நேரலாமெனத் தெரியவருகிறது. பதினைந்தாம் நூற்றாண்டிலே ஸ்பெயின் (Spain) தேசத்திலே ஒன்றரைநாளளவு பாணவேடிக்கைபோல் ஆகாயத்தில் இரவும் பகலும் எரிநக்ஷத்திரங்கள் துளங்குவதைக் கண்டு ஊர்கள் நிலைகுலைந்தனவென அத்தேச சரித்திராசிரியர் கூறுகின்றார். ஐந்தாம் நூற்றாண்டிலே சில வருடங்கள், மிகவும் கடூரமாய் உலகத்தில் மன்பதைகளை வதைத்ததாய் அறிகின்றோம். அக்கொடுமையை ஒருவாறு ஒழிப்பதற்கே சம்பந்தரும் அப்பரும் அக்காலத்திற் பிறந்தனரோ அறியோம். திருவீழிமிழலையில் இரண்டு வருடகாலம் பஞ்சம் இருந்ததென்றும், அதன் கொடுமையை ஆற்றுதற்குப் பரமனருளால் படிக்காசு பெற்று இவ்விருவரும் உலகத்திலுள்ளஜனங்களுக்கு உணவளித்தனரென்றும், சுந்தரர் திருவாக்காலும் காண்கின்றோம்:—

110வது பக்கத் தொடர்ச்சி

நேசமுடை யடியவர்கள் வருந்தாமை யருந்த
 நிறைமறையோ ருறைவீழி மிழலைதனி னித்தல்
காசருளிச் செய்தீரின் றெனக்கருள வேண்டுங்
 கடவுகைக் காரோண மேவியிருந் தீரே.

இவ்வாறு பஞ்சத்தை நீக்கி உலகத்தைக் காத்தவர் இருவர்களில் ஒருவராகிய அப்பரும்,

" கன்னெடுங் காலம் வெதும்பிக்
 கருங்கட னீர்சுருங்கிப்
பன்னெடுங் கால மழைதான்
 மறுக்கினும் பஞ்சமுண்டென்
றென்னெடுஞ் சூளறு மஞ்சனெஞ்
 சேயிமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண்
 டீரிப் புகலிடத்தே" என்றார்.

இவ்வாறு அப்பர் பாடியது திருவீழிமிழலைப் பஞ்சத்திற்குப் பின்னரென்றே கொள்ளல்வேண்டும். அப்பர், சம்பந்தர் காலத்திலும் பஞ்சங்கள் இடையிடையே சிற்சில காலங்களில் வருவதும் ஜனங்களை * வருத்துவதுமான தன்மையின் நீழல் தேவாரப்பதிகங்களிலும் காணப்படும். இதனாலேயே,

"இரப்பவர்க்கீ யவைத்தா ரிருப்பவர்க் கருளும்வைத்தார், கரப்பவர்தங் கட்கெல்லாங் கடுநரகங்கள் வைத்தார்" என்றுஅப்பர்,திருவாய் மலர்ந்தருளியது,பஞ்சக்காலத்தில் ஈகைத்தன்மை குறைந்தது கண்டு மன மிக மிக வுருகியே உரைக்கலாயிற்றென்று கொள்ளல் வேண்டும். தன்னைத்தான் வெறுத்துக் கொள்ளுங்காலத்தில், "குலம் பொல்லேன் குணம் பொல்லேன்" என்னும் பாசுரத்தில், "இரப்பதே ஈயமாட்டேன் என் செய்வான் ஏழையேன் தோன்றினேனே." என்றும் பாடினார்.

திருநின்ற சருக்கத்தில், அப்பர் தனது பூஸ்திதி முதலியவற்றை விற்று அடியார்களுக்கு அன்னமிட்டா ரென்று சேக்கிழாரும் கூறுகின்றார். அக்காலத்தில் அன்னசத்திரம் தண்ணீர்ப்பந்தல் முதலியன எங்கும் நிறுவுவது தருமசீலர் குணமாயிருந்தது. அப்பூதியடிகளும் திருநாவுக்கரசு பேரால் தருமசாலைகள் பல இடங்களில் ஏற்பாடு செய்ததாக அவர் சரித்திரத்தில் காண்கின்றோம். இத்தகைய அன்னதானத்தால் அப்பூதியடிகளது திங்களூர், அப்பர் மனதில் என்றும் பிறங்கிநின்றதைக் காண்க.

18909

தேரூரார் மாவூரார் திங்க ளூரார்
 திகழ்புன் சடைமுடிமேற் றிங்கள் சூடிக்
காரூரா நின்ற கழனிச் சாயற்
 கண்ணார்ந்த நெடுமாடங் கலந்து தோன்றும்
ஓரூரா வுலகெலா மொப்பக் கூடி
 யுமையாண் மணவாளா வென்று வாழ்த்தி
ஆரூரா வாரூரா வென்கின் றார்கள்
 அமரர்கடம் பெருமானே யெங்குற் றாயே?

அப்பர் காலம் பஞ்சத்தால் வருந்தியகாலம் என்பதற்கு, வானத்தில் துர்நிமித்தமான எரிநக்ஷத்திரங்கள் உலகத்தில்விளையும்கேடுகளையுக் குறிப்பதுபோல் ஒரு சான்றாய் நின்ற சீர்நெடுமாறன் நெல்வேலி யுத்தகளத்தில் பகைவரைவென்றதுஞ் சான்றாம். ஆயினும் சேக்கிழார் வடதேசத்துச் சேனைகள் என்றார். வடதேசத்துச் சேனைகள் சோழநாடு பாண்டியநாடுகளைக் கடந்தன்றோ திருநெல்வேலிக்குச் செல்லவேண்டும். பாண்டியன் மாமனை சோழனது ராஜ்ஜியத்தின் வழியே வடபுலத்தார் வந்தனர் என்றால் சரித்திர ஆராய்ச்சிக்குச் சற்றும் பொருந்தவில்லை. சேக்கிழார் கர்ணபரம்பரையில் கேட்ட, பகைவர் சேனைகளெல்லாம் வடபுலச் சேனைகளாகவே பெரிய புராணத்தில் காணப்படுகின்றன. திருநெல்வேலியில் மாறன்வென்ற பகைவர்சேனை, ஈழநாட்டு (Ceylon) சேனையாகவே இருக்கவேண்டுமென்று நாம் எண்ணவேண்டும்.

அடியார்களில் மூன்றும் கொத்தாகக் கொள்ளக் கூடியவர்கள் மூவருக்கு முன்னவர்கள். இவர்களில்

* அலங்கன்மலி வானவருந் தானவரு
 மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
 கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
 கூன்சலிக்குங் காலந்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
 மெய்யர்வாழ் கழுமலமே. சம்பந்தர்.

கண்ணப்பர் காலம் சங்கத்தார் காலத்திற்கு முற்படும். நாகரிகத்தில் முதல் முதல் தலைகாட்டுவது பக்தியென்னும் பேரன்பு. கண்ணப்பருடைய பக்தி நமது நாகரிக ஒழுங்கில் சீர் தூக்கக்கூடியதன்று.

ஊனுணேண்ட னன்றென வூனுடுண்ட நீதென
'ஆனதொண்ட ரன்பினுற் பேசநின்ற தன்மையான்,

எவ்விதமாய்ப் பக்தி செலுத்தினும் ஏற்பன் என்பதற்கு இவர் சரித்திரம் ஒரு அத்தாக்ஷியாகும். இச்சரித்திர உண்மை இன்றும் திருக்காளத்தியில் சிற்பவொழுங்கில் காட்டப்பட்டிருக்கின்றது. அம்மலையைச் சம்பந்தர் பாடியதுபோல், இன்றும்,

'வாரதரிருங்குறவர் சேவலின்மடுத்தவரெடுத்தவிறகில்
காரகிலிரும்புகை விசும்புகமழ்கின்ற காளத்திமலையே''

காரைக்காலம்மையார் கடைச்சங்கத்தார் காலத்திற்குப் பிற்பட்டவர். ஏனெனி லவர்பாடிய தேவாரமாகிய அம்மைமூத்த திருப்பதிகம் ஒருவகை சந்த விருத்தமாகக் காணப்படுகின்றது இது நட்டபாஷை பண்ணில் பாடலா மென்பர் சிலர். ஆயினும் இதன் யர்ப்பு அடியில் வருமாறு:—

'ஒவ்வொரு அடியும் இரண்டு பாகமாக, ஒவ்வொரு பாகமும் மூன்று கூவிளச்சீரும் ஒரு நெடிலும் பெற்று விளங்கும். அதாவது கூவிளம்-கூவிளங்காய் என்னும் சீர்கள் அமைந்த அறுசீர்ச் சந்தவிருத்தமாம். உதாரணம்:—

கொங்கைதி ரங்கிந ரம்பெழுந் து
குண்டுகண் வெண்பற்கு ழிவயிற் றுப்
பங்கிசி வந்திரு பற்கணீண் டு
பாடுயர் நீள்கணைக் காலோர்பெண்
பேய்தங்கி யலறியு லறுகாட் டிற்
றழ்சடை யெட்டுத்தி சைகள்வீ சி
யங்கங்கு ளிர்ந்தன லாடுமெங் கள்
அப்பனி டந்திரு வாலங்கா டே!

[குறிப்பு:—"விளமது வருமென விதித்த வீட்டினில் விளமது கொண்டிலாக் காய்ச்சீர்மேவுதல்'' இவ் விருத்த யாப்புக்குப் பொருந்தும் ]

இத்தகைய விருத்தம் காரைக்காலம்மையார் பதிகமாதலால் சங்கத்தார் காலத்திய பதிகமன்று. ஏனெனில் அக்காலத்தில் விருத்தமென்பதே வழக்கத்தில் இல்லை. ஆதலால் சம்பந்தர் காலத்திற்குச் சுமார் ஒரு நூற்றுண்டுக்கு முன்னர்க் காரைக்காலம்மையார் காலம் எனலாகும்.சம்பந்தர்காலம் ஐந்தாம்நூற்றுண்டாயின் இவர்காலம் நான்காம் நூற்றுண்டின் முதலில் எனலாம். இது கலியர் காலமாதலால், கடலோரத்திலுள்ள பட்டணங்களில் மாத்திரம் கப்பல் மார்க்கமாய்த் தேசவணிகம் நடந்ததே யொழிய உள்ளூர் வியாபாரத்தைக் காட்டும் அகச்சான்றுகள் பேயார் சரித்திரத்தில் காணப்பட வில்லை.

ஐயடிகள் காடவர்கோன் காலமும், பூசலார் நாயனார் காலமும் ஒன்று. ஐயடிகள் காடவர்கோன் பாடிய திருவெண்பா நடையை நோக்குங்கால் அது நக்கீரர் பாடிய கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதிபோல் காணப்படுகின்றது. இவர் காலம் சங்கத்தார் காலம் எனலாகும்.

திருமூலநாயனார் காலம் கடைச் சங்கத்தார் காலத்தின் இறுதியெனலாம் அவர்பாடிய விருததங்களெல்லாம் பெரும்பாலும் வெண்டளைபெற்று விளங்கும்:—

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னரு
ணின்றனன் மூன்றினு ளன்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரித்தன னேழுபார்
சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்.

### 1. மந்திரப் படலம்.

இறையேயிது முறையோவென
மொழிமூன்றினி லறைகூவுவர்.

விரகின்றி வேந்தில்லை என்று வீடுமர் கூசிக்கூசியே (அல்லது கூசாமலேயோ) விளம்பியுள கோநெறியைக் கொண்டாட மனம்பெறுது சிலர்மறுத்திருக்குஞ் செவ்வி, ஆரியந் தமிழெனு மிருமொழி இலக்கியங்களிலும் இருக்கு முண்மையை நினைக்குங்கால்,வேந்தர்புரி விரகிற்குவெளிப்படையாய் அறைகூவிப் புயம்புடைத்து முன்வந்து நிற்கும்வீரர் பாணரைக் காண்கின்றோம்.

115 பக்கத் தொடர்ச்சி.

சந்திரகுப்த மன்னனது அவைக்கொரு அருங்கலனென மதிக்கப்பெறும் சானக்கியன் வகுத்திருக்கும் அர்த்தசாஸ்திரத்தில், அரசியல்முறைகள் பெரும்பாலும் பீஷ்மர் உரைத்தவண்ணமே அமைந்திருக்கின்றனவென்பதை அறியாதார் சிலரே. அரசேற்று ஆள்வதன் நோக்கத்தைப் பீஷ்மரளவு உயர்த்தத்தான் கற்றிலனேனும், ஒற்றமைப்பினும் பகையொடுக்குந் திறத்திலும், குடிகளை யடக்கியாளும் வகையினும், இறைமிகக் கறக்குஞ் சூழ்ச்சியினும், அறங்கடந்த தந்திரங்கள் தேர்ந்துரைப்பதில் கங்கைமகனைக் கௌடில்யன் பலபடி வென்றுவிட்டான். அரசியல் நெறிகளுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்ற இவ் வர்த்தசாஸ்திரம், கற்றோர் களிக்கும் வடமொழி நாடகம் காதம்பரியின் ஆசிரியராய பாண கவிக்கு அளவிறந்த வெறுப்பைத் தந்திருக்கவேண்டும். அந்நூலின்கண், தன் மைந்தன் சந்திராபீடனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டுதற்கமைந்த செவ்வியில், உஜ்ஜினி தேசத்தரசன், மந்திரி சுகநாசரை யழைத்து, "இம்மகற்கு அரசியல் முறைமையும் நெறியையும் அறைவீர்'' என, அம்மந்திரி மைந்தனை நோக்கி,

"கிம் வா தேஷாம் ஸாம்பரதம் யேஷாம் அதிந்ருசம் ஸப்ராயோபதேச நிர்க்ருணம் கௌடில்ய சாஸ்த்ரம் ப்ரமாணம்''

எனத் தான் சாணக்கியநீதிக்கு உடன்படாமையைத் தெற்றென விளம்பிய மேன்மை யெய்தினர். "எவர்களுக்கு மிகக்கடுமையான உபதேசங்களை உணர்த்தும்



28 MAY 1930

இரக்கமற்ற சாணக்கியநீதிகள் பிரமாணங்களாகவும், அபிசாரம்என்னும் கொடிய சூன்யத்தொழில் புரியும் புரோகிதர் ஆசாரியராகவும், பிறரை வஞ்சிப்பதிலேயே எண்ணங்கொண்ட அமைச்சர்கள் ஆலோசனை கூறுபவர்களாகவும், இயற்கையிலேயே அன்பார்ந்த உள்ளத்தையுடைய உடன்பிறந்தோரே வேருடன் அழிக்கக் கூடியவராகவும் ஆகின்றனரோ, அத்தகைய அரசர்களது நடத்தையில் எதுதான் ஏற்கத் தகுந்ததாகும்'' எனப் பொருள்படும் அவ்வாசகம் பாணரது கருத்தை யுணர்த்துவதாயினும் ஆகுக, அல்லது நாடகமுறையில், சுகநாசரது கருத்தையே தெரிவிப்பதாயினும் ஆகுக. இந்த இராஜதர்மத்தின் அமைதி ஆன்றோரா லயிர்த்தற்குரியதாய் நிற்கின்றதென்பதைக் 'காதம்பரி' காட்டிக்கொடுக்கின்றது.

வியாசபாரதத்தின் வழிபற்றி யெழுதிய வில்லிபுத்தூரர், முதனூலினின்று கொள்ளாது விட்டன கணக்கிலவாயினும் அதனி லில்லாதவொன்று தான் சேர்த்துக்கொண்டிருப்பது கடோற்கசன் தூது. தன்னரு மைந்தன் அபிமன்னுவை வஞ்சனையாற் கொன்ற சயத்திரதனை "மறுநாள் கதிரவன் சாயுமுன் கொன்று அப்பழி தீரேனேல் தீமூழ்கி யென்னுயிர் தீர்த்துக்கொள்வே''னென்ன வஞ்சினங்கூறிய விசயன், கண்ணனோடு அவ்விரவு கயிலைவா ழண்ணலைப் பரவிமீள ஏகியிருந்தபோது, போர்முறையில் மறைகாத்தல் முதன்மையென ஓர்தல்போக்கித் தருமராசன், பீமனது புதல்வன் கடோற்கசனைக் கூப்பிட்டு, "சிறுவ, துரியோதனன் இருக்கும் பாசறை சென்று, விசயன் கழறிய வஞ்சினமும், சிவபிரானிடம் படைபெற அவன் இமயவரை போயிருப்பதும் இயம்பிவா'' என விதிக்கவும் அவ் விடும்பியின் மைந்தன், "செற்றவர் தம்முடன் உற்றது சொல்வது சேவகமோ அறிவோ'' எனத் திகைப்புற்று மறுக்குங்கால், மெய்ம்மையை உணர்ந்த உதிட்டிரன், "விறல்நெறியாவது பொய்யிலது; ஆதலின், மாருதி சிறுவ, நீ செல்க'' எனத் தகைந்தனன் *. இவ்விதம் இங்கு, இரகசியம் என்னும் இராஜதந்திரத்தைப் போர்முறையிலேயே கடிந்துரைத்து, அறத்தின் தன்மையைத் தருமனறிவுறுத்துமாறு வில்லிபுத்தூரர் அமைத்தது அரக்கச்சிறுவனை நோக்கியோ,மற்று அரசநீதியென்று மொழியப்பெறும் சாத்திரத்திற் கெதிர்கூறியோ அறிகிலேம். அம்புப்பாயலின் மீதிருந்து வீடுமன் செய்த உபதேசங்களைக் கேட்குமுன் தருமன் இவ்வாறு செப்பினனென்பது உண்மையே. மற்று அவைகளைக் கேட்டபின், இவ்விதச் செவ்வி வேறொன்று நேருமாயின், அவன் கொள்கையும் செயலும் மாறியிருக்குமோ என் றெடுத்தியம்ப லருமை. வில்லிபாரதத்தில் சாந்திபர்வம் விரித்துரைக்கப் பெற்றிருக்கவில்லை.

கௌடில்ய சாஸ்திரத்தைச் சுரமைநாட் டரசன் பயாபதியும் பிரமாணமாக் கொண்டிலன் என்பதைத் தோலாமொழித்தேவர் தன் சூளாமணியில் மூன்று பாசுரங்களா லினிது விளக்குகின்றார். பாணரைப் போல் கண்ணோட்டமின்றிக் கடிந்திலரேனும் குறிப்பினால் இவர் கொண்ட பொருளும் அன்னதே. ஏனெனில்,

எண்ணின ரெண்ணகப் படாத செய்கையா
னண்ணிய ரகன்றவர் திறத்து மாணையா
னண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினுந்
தண்ணியன் வெய்யனந் தானை மன்னனே.

[அழகிய சேனையை உடைய அம் மன்னன், இவனது செய்கையின் மேன்மை எவ்வளவுதான் உயர்ந்ததாயிருக்கும் என்று மதிக்கப் புகுகின்றவர்களுடைய கருத்திற்கு மடங்காது மேம்பட்ட தூய செய்கைகளை யுடையவன்; தனக்கு நெருங்கினவர்திறத்தும் நெருங்காது விலகினவர் திறத்தும் பக்ஷபாதமில்லாது செலுத்தும் நீதியை உடையவன்; நண்பர் பகைவர் என்ற இருதிறத்தார்க்கும் எப்பொழுதும் கருணையுடையவனும் அவர்களால் விரும்பப்படுபவனும் ஆனவன்]

என்றனர் தேவர். இச்செய்யுளிற்கு இங்கு வரைந்திருக்கின்றபொருள் ஒருவாறு வலிந்தமைந்திருப்பது போல் தோன்றலாம். பயாபதி, எண்ணின ரெண்ணகப்படாத செய்கையா னதலை, எண்ணுதற்குமரிய அவன் செயல்களின் பெருமையினுல் பெற்றோம். மற்று, பீஷ்மர் இசைத்த கோத்தருமத்திற் கிணங்கினனுப் காளிதாசன்,

தஸ்ய ஸம்வ்ரத மந்தரஸ்ய கூடாகாரேங்கிதஸ்ய ச
பலாநு மேயாஹ ப்ராரம்பா ஸம்ஸ்காராஹ ப்ராக்தநா இவ

[தன்னுடைய இரகசியம் ஆலோசனை முதலியவைகளைத் தன் செய்கை தோற்றம் குறிப்பு முதலியவைகளாலும் பிறர் அறியாவண்ணம் மறைத்து வைத்திருப்பவன், பலனை அடைந்த பிறகே இதன் காரணமான கர்மம் இன்னவிதமாயிருந்திருக்கவேண்டுமென்று அநுமானிக்கக் கூடியதாயிருப்பதுபோலவே, அவனது காரியம் முடிந்தபிறகே, என்ன கருத்தினனுய் விவகரித்தான் என்பதைப் பிறர் ஒருவாறு ஊகிக்கக்கூடும்—என்பது இச்சுலோகத்தின் கருத்து]

என்றதிலீபவேந்தனது திறமையைப் பாராட்டியவண்ணம், எண்ணினர் எண்ணகப்படாத செய்கையான் என்பதற்கும் பொருள்கொள்ளக் கூடுமென்பது உண்மையே. அவ்வாறே, 'வெய்யன்' என்பதற்கு 'விரும்பப்படுபவன்' எனப் பொருள்கொண்டு அதனை நண்ணுநர் பகைவர் என்ற இருதிறத்தாருக்கும் சேர்க்காமல், 'கொடியன்' என்ற அர்த்தத்தில் பகைவருக்கே சார்த்தினுலும் 'பீமகாந்தை ந்ருபகுணை'என்ற காளிதாசன் கருத்தோடு ஒக்கும். எனினும் கரவிலாப் பெருமையும், பயமிலா நயமுமே தோலாமொழித்தேவர் பயாபதிவேந்தனுக்குப் பயக்குவித்தனர் எனத் துணிதல்வேண்டும் என்பதற்குப் பின்வரும் இரண்டு செய்யுள்களும் ஆதாரமாகின்றன. அவைகளில்,

நாமவே னரபதி யுலகங் காத்தநாட்
காமவேள் கவர்கணை கலந்த தல்லது
தாமவேல் வயவர்தந் தழலங் கொல்படை
நாமநீர் வரைப்பக நலிவதில்லையே

[அச்சந்தருகின்ற வேலாயுதத்தை ஏந்திய பயாபதிமன்னன் உலகத்தைக் காத்த காலத்தில், கருத்தைக்கவர்கின்ற மன்மதனது பாணங்கள் பட்டனவே யல்லாது, மாலை சூட்டிய வேலை யேந்திய வீரர்களது தீப்போன்று கொல்கின்ற படைகள், அச்சமுடைய கடலால் சூழப்பட்ட உலகத்தில், ஒருவரையும் வருத்தின என்பது இல்லை]

என்ற பாசுரத்தால் அவன் கொடியனு யிருந்திலன் என்பதைத் தெரிவிக்கின்றார். கள்ளரைக் கற்பித்தும்

* 'மதுகரம்' எனப் புனைப்பெயர் பூண்டு 'மலர் வனம்' என்னுந் தலைப்போடு இவ்விதழ்களில் எழுதிவருபவர் இச் செய்தியின் அருமையை, முன் 1-வது வால்யூம், 152-வது பக்கத்தில் நன்கு விளக்கி இருக்கின்றார்.

பகை வருகின்றதென மருட்டியும் மின்னலைப்போல் அச்சுறுத்திக் குடிகளிடத்திலிருந்து இறையைக் கறந்துகொள்ளவேண்டுமென்று பீஷ்மர் வகுத்தநெறிக்கு மாறாகப் பயாபதிமன்னன்,

ஆறிலொன் றறமென வருளி னல்லதொன்
றாறுசெய் துலகினி னுவப்ப தில்லையே
மாறினின் றவரையும் வணக்கி னல்லது
சீறினின் றெவரையுஞ் செகுப்ப தில்லையே

[தம் வருவாயில் ஆறிலொருபங்கு அரசனுக்குக் கொடுக்க வேண்டியது கடமை என்று குடிகள் அருளோடு தாமாகவே கொடுத்தால் பெற்றுக்கொள்வானே யல்லாமல், இறை வாங்கும் நிமித்தமாகச் சிறிதேனுந் துன்பஞ்செய்து சேர்த்த இறைப்பொருள் மிகுதியால் அவன் பெருமிதம் அடைவதில்லை. தன்னோடு மாறுபட்டு நின்றவர்களையும் அன்பினால் தன்வய மாக்கிக்கொள்வதன்றிக் கோபித்து எவரையும் அவன் கொல்வதில்லை.]

என்பதையும் உன்னுங்கால் இப்புலவர் அர்த்தசாஸ்திரத்திற்கு முகங்கொடுத்திலர் என்பதுவெளிப்படை.

இன்னவாறு வில்லியொடு தேவரும் பொருள் நூலின் போக்குத் தகவிலதென்று தாங் கொள்ளாமையைக் குறித்துநிற்க, அதனை வன்மையொடு தகைந்திகழ்ந்த வடமொழிப்பாணருக்கு இணையாய்த் தகைந்தனர் ஆங்கில ஆசிரியர் ரஸ்கின் என்பவர். அனைத்திற்கு மாதாரம் அரசனே என்னும் கொள்கை முற்றிலுமாறிச் சனங்கள்தம், வர்த்தகம்கைத்தொழில் முறைகளால் நாட்டினது பொருள்நிலை நிறுவப்படல் வேண்டுமென்ற கருத்தே தலையெடுத்திருக்கும் இக்காலத்திற்கிணங்கநிகழும் பொருள் நூலின் கொள்கைகளே (Principles of Political Economy) ஆசிரியர் ரஸ்கினது பார்வைக் குட்படலாயின. குடிகளைக் காத்து நாட்டுநலம் பேணுதற்கமைந்த அரசன், சிறிதுகூட அதர்மம் இல்லாதிரப்பது அருமையென்றும், ஜனங்களுடைய நன்மைக்காக அந்த அதர்மத்தைச் செய்வதும் இராஜனுக்குத் தர்மமே என்றும் பீஷ்மர் கூறினர். "எனக்கொன்றுங் கபடமாய்ச் சொல்லத் தெரியாது"......ஆகையால் இவ்வதர்மம் இருக்கத்தான் வேண்டுமென்று ஒப்புக்கொள்ளாமல் தன்னால் தீரவில்லை என்று பீஷ்மர் ஓரிடத்தில் சொல்லியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. தற்காலப் பொருளாதாய சாஸ்திரம் பீஷ்மரைப்போல் கபடமற்றதன்று. இராஜதர்மத்தைப்போல் இத்தனதாய தர்மமும் பொதுஜன நன்மைக்கென்று அமைந்திருக்கின்றது. ஆனால், அவசியமான அதர்மம் சிறிது தன்னிற் கலந்திருக்கின்றதென்று இராஜதர்மம் கபடற்ற பீஷ்மர் வாயினால் ஒப்புக்கொள்ள, தனதாய தர்மமோ அவ்வளவுகூட ஒப்புக்கொள்வதே யில்லை. எனினும், நாட்டின் செல்வவளர்ச்சிக்குத் தர்மமான போட்டி (Fair competition) இன்றியமையாததெனக் கருதுகின்ற தனதாயசாஸ்திரத்தினது அடிப்படையான கொள்கையை, அன்பேனும் ஆன்மாவேனும் மனிதர்க்கு உளவென்னும் எண்ணத்தை அடியோடு மறுத்துநிற்கும் மாபெரும் பாதகமென ஜான் ரஸ்கின் இகழ்கின்றனர். இப்போட்டியே இயற்கையென்று தனதாயசாஸ்திர நிபுணர்கள் காட்ட முயல்வாராகி,

"மனிதர் ஒருவரோடொருவர் அன்புடன் கலந்து வாழ்வாரென்பது நிச்சயமன்று. மாநுட இயற்கையில் பொதுவாக அன்பிற்கு இடமில்லை. எங்கேயாகிலும் காணப்படுமாயின் அது விபரீதமே. ஆதலின் அன்பு அபிமானம் முதலியவைகளை நம்பி வாழ்க்கையை நடத்த நினைத்தல் மனப்பால் குடித்தலன்றி வேறன்று. ஆனால், அளவிலாப் பேராசையும், மற்றவரைப் பின்தள்ளித் தான் முன்னிற்க வேண்டுமென்னும் நோக்கமும் மாந்தரிடத்தில் இருப்பது நிச்சயம். அது மாறுவதுமில்லை. ஆகையால் அன்புபோன்ற நிச்சயமற்றவைகளை நம்பியொரு கருமமுங் கைக்கொள்ளாமல், ஒருபோதுமாறாதிருக்கின்ற பேராசை யனைய நோக்கங்களைப் பற்றுக்கோடாகக் கொள்வதே தக்கதாகும். அதன்படி, பேராசையால் இயங்குமொரு யந்திரமே மனிதனென மதித்து, கைத்தொழில் வர்த்தக முறைகளை எவ்வகையில் அமைத்தால் அவன் பணத்தைக் குவியல்குவியலாகச் சம்பாதிக்கக்கூடும் என்பதற்கியன்ற உபாயங்களை ஆராய்ந்து ஏற்படுத்த வேண்டும்"

என்னு முட்கருத்தோடு கரந்தொழுகுங் கொடுமை தான்வேறொன்றுளதோவெனச் சினந்து, இந்தச்சாஸ்திரத்தின் வாய்ப்பட்டுக் களிக்கும் மன்பதைத் தொகுதியின் கதியை நினைத்துமிக மதிப்புண்ட மனத்தினராய் ரஸ்கின் இரங்கக் காண்கின்றோம்.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[106-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour)

இச்செயல்களைத் திருப்பக்கொள்கை விளக்கிவைக்க முடியுமா? நடத்தைக் கொள்கையினர் சிலர், தேனீ தேனை நாடிச்சென்று திரும்புவதைத் திருப்பக் கொள்கையால் விளக்கிவைக்கின்றனர். அஃது உண்மையானால் அவ்விளக்கம் குளவியின் செயலுக்கும் பொருந்துதல் வேண்டுமே. தேன்கூட்டில் ஒருவகையான மின்னாற்றல் உண்டாம். தேன் கொண்டுவாராதபோது அவை மின் பின்திருப்பமுடையனவாக விளங்குகின்றன; ஆதலினம் மின்னாற்றலுடைய தேனடையைவிட்டு ஈக்கள் பறந்து ஓடுகின்றன. தேன்கொண்டு வருகையில் மின் முன்திருப்பமுடையன வாகின்றன. ஆதலின் அம் மின்னாற்றலுடைய தேனடையை நோக்கிப் பறந்து வருகின்றன என்பர். ஆனால் நாமோ, இத்தேனீக்கள் இடவாராய்ச்சி செய்தே தம்மிருப்பிடத்திற்குத் திரும்பிவருகின்றன என்ன முடிவுகட்டுகின்றோம். தேனீ பறந்துசென்றபின், அத்தேனடையை வேறோரிடத்திற்குக் கொண்டு செல்வோமானால் அத்தேனீ, கூட்டினிடம் பறந்து வருவதில்லை; அத்தேனடை முன்னிருந்த இடத்திற்கே பறந்துபோ



கிறது. இடநிலையை யுணர்ந்ததன் பயனன்றோ இது. மின்னாற்றலே இத்தேனீயைப் பற்றிவலிக்கின்றதென்றால், அம் மின்னாற்றல் கூட்டிலன்றி அக்கூடு இருந்த இடத்திலேயே உள்ளதெனக் கூறவேண்டும். அன்றியும், ஒவ்வொரு கூண்டிலும் ஒவ்வொரு வகையான மின்னாற்றல் உண்டெனவும் கூறவேண்டும். ஒரு தேனீ தன் தேனடையினிடம் வந்து சேருகின்றதேயன்றி அதற்கருகே பலதேனடைகள் இருந்தாலும் அவற்றினிடம் போய்ச் சேருகிறதில்லை யன்றோ! எனின் இம் மின்னாற்றல் தேனடையில் மட்டுமன்றி வேறுபல பொருள்களிலும்உள்ளதென்றும் கூறுதல்வேண்டும். தேனடையை வேட்டையாடுவார், ஓரிடத்தில் பாகுவைத்துக் குந்தியிருப்பர்; தேனீக்கள் அப்பாகை உண்ண வந்தால், அவற்றின் தலையில் ஒருநிறப் புள்ளியை வைத்து அனுப்புவர். அத்தேனீக்கள்சென்று மற்றும் பல தேனீக்களை உடன் கொண்டுவரும். புள்ளியைக் கண்டவுடன் முன்சென்ற தேனீக்களே இவற்றைக் கொண்டுவந்தன என அறியலாம் அன்றோ? இவ்வாறு வந்துபோகின்ற தேனீக்கள் பறந்துசெல்லும் வழியே சென்று தேனடையைக் கண்டுபிடித்துக்கொள்வர். எனவே, இத்தேனீக்களைப் பற்றிவலிக்கும் மின்னாற்றல் பாகுக்குடத்திலும் உண்டென்பதாயிற்று. இப்பாகில் இருக்கும் மின்னாற்றலுக்குத் தமது தேனடையிலுள்ள மின்னாற்றலும் வெற்றுமை இல்லையாதல் வேண்டும். இரண்டும் இவற்றைப்பற்றி வலிக்கின்றனவன்றோ? அவ்வாறாயின், ஒருகால் பாகுக்குடத்திலும் ஒருகால் தேனடையிலும் தங்குவது எதனாலே? இவ்வாறே மாற்றிமாற்றிக் கணக்காண்பதே நடத்தைக் கொள்கையின் முடிவென்க. தேனீக்களுள் மற்றைய செயல்களும், அவை புலனுணர்ச்சியுள்ளன என்பதற்கிணங்க அறிவுச்செயல்களாக விளங்குகின்றன அன்றோ? இரண்டு கல் தொலைவிற்குமேல் இத்தேனீக்கள் பறந்து செல்வதில்லை. அவ்வாறு பறந்து சென்றால் அவை கூட்டிற்குத் திரும்புவதில்லை. அங்ஙனமே அவை திரும்புவதற்குமுன் பொழுதுசாய்ந்தலும், கூட்டினிடம் மீள்வதில்லை. எல்லைக்குறிகள் ஒன்றுமே இல்லாத வெறுந் தரையருகே, கூடுகட்டினால், அவை எதனைக் குறியாகக் கண்டு உணர்ந்து மீளுதல் கூடும். ஆதலினால், அந்நிலையில் அவை கூடு திரும்புவதில்லை. நாம், தேனடையைச் சுற்றியுள்ள பொருளை இடமாற்றி வைத்தாலும், அப்புறப்படுத்தினாலும், திரும்பிவரும் தேனீ திகைத்துப்போய்த் தேனடையைச் சேருவதில்லை. மின்னாற்றல் இவற்றைப் பற்றிவலித்தால் இவ்வாறெல்லாம் நிகழ்வானேன். இரவில் மின்னாற்றல் தேனீயைப் பற்றி வலிப்பதில்லையோ? இரண்டு கல்லுக்கு அப்புறத்தில் இம் மின்னாற்றல் பாய்வதில்லையோ? இம்மின்னாற்றல் சுற்றியுள்ள பொருள்களிலும் அவற்றின் தொடர்பிலும் இருக்கின்றதோ? மேற்கூறியவை யனைத்தும் திருப்பக் கொள்கையை மறுத்துரையாடுகின்றன. தேனீக்கள் குளவியைப்போல, இடவாராய்ச்சி செய்தே தம்மிருப்பிடத்தின் நிலையைப் புலனுணர்ந்து பின் திரும்பும்போது அம் முன்றுகர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்கின்றன என்ற கொள்கையே வலியுறுகின்றது.

இவ்வாறே, திருப்பக் கொள்கைகொண்டு குளவியின் செயலை விளக்கவேண்டுமானால், தம் வளையில் ஒருவகையான மின்னாற்றலைக் குளவிகள் உண்டாக்குகின்றன எனல் வேண்டும். ஓரே இடத்தில் பல குளவிகளும் வளைதோண்டுமாகையால் ஒவ்வோர் வளையிலும் ஒவ்வொரு வகையான மின்னாற்றல் உண்டெனக் கூறவேண்டும். இரை இல்லாதபோது, அவை மின் பின்திருப்பமுடையனவாய் வளையினைவிட்டு அப்புறத்தே பறந்து ஓடுகின்றன எனல் வேண்டும்? இரை கிடைத்ததும் அவை மின் முன்திருப்பமுடையனவாய் வளையை நோக்கிப் பறந்து ஓடுகின்றன எனல்வேண்டும். முட்டையிட்டவுடன் மறுபடியும் மின் பின்திருப்பமுடையனவாய் வளையை விட்டுப் பறந்தோடுகின்றன எனல் வேண்டும். இவை எல்லாம் கனவேயன்றி நனவல்ல.

வளையினின்றும் புறப்படுகையில் இடவாராய்ச்சி செய்தே இடநிலையை உணர்ந்து, அந்நுகர்ச்சியைப் பின் மீண்டுவருகையில் பயன்படுத்திக்கொள்ளும் இவ்வறிவுச் செயல் குளவிக்கும் உண்டு என்பதாயிற்று. முட்டையிடும் செயலோ, இயற்கைச் செயலாகும்; எனவே இயற்கைச் செயலுக்கு அறிவுச் செயல் துணையாகின்றது என்பதாயிற்று. இவ்வாறு தான் வாழ்க்கையெங்கும் அறிவுச்செயலும் இயற்கைச்செயலும் ஒன்றிற்கொன்று துணையாகி விளங்குகின்றன.

குளவி இரையினைக் கண்டெடுத்ததும், அதனைக் கொட்டுகின்றது. நஞ்சு உடலிற் பாய்வதால் இரையாம் புழு மயக்கமடைகின்றது. ஆனால், அஃது இறப்பதில்லை என்றனர் ஒரு சாரார். அப்புழுவின் நரம்பு முடிச்சியில் தவறாமற்கொட்டுவதால் இவ்வாறு நிகழ்கின்றது என்றனர். இறந்துபோனால் அப்பூச்சி புழுத்துப்போகுமாகையால், முட்டை குஞ்சாகப் பொரிகையில் அக்குஞ்சு நாற்றத்தால் இறந்துபடும் என்றனர். இறந்துபடா வகையில் கைதேர்ந்த மருத்துவனைப் போல, அப்புழுவினைக் கொட்டவேண்டிய இடத்தில் கொட்டும் இயற்கைச்செயலை என் என்று புகழ்வது என வியந்தனர். இவையனைத்தும் மடக்குச் செயலே என முடிவுகாட்டினர் மற்றொரு சாரார். பின்வந்த ஆராய்ச்சியாளர்கள் இஃது மடக்குச் செயல் அன்றென முடிவு காட்டியுள்ளார்கள். அக்குளவி ஒரு எரிப்புழுவைக் கொட்டும்போது கொட்ட வேண்டிய இடத்தில் மருத்துவன் தவறாது கொட்டுவதுபோலக் கொட்டுவதில்லை. ஓரே கொட்டில் அதனை அசையாமற் செய்வதும் இல்லை. பலமுறையும் பலவகையாகக் கொட்டுகின்றது. சிலபொழுது அப்புழு இறந்தும் போகிறது. அவ்வாறு இறந்து போவதால் அவ்விரை குஞ்சுக்குப் பயன்படாமற் போவதில்லை. ஓரே வகையாகக்கொட்டாது, அப்புழு அசையாமற் கிடக்கும்வரை மாற்றிமாற்றிப் பல நிலையிலும் பலவகையாக கொட்டுவது நடத்தையன்றோ?

மற்றொரு குளவி, இரையை வளையருகே கொண்டு வந்ததும் அதனை நேரே உள்ளே இழுத்துப் போவதில்லை. அதை வாயிற்புறத்தேவிட்டுவிட்டு வளைக்குள் சென்றுபார்த்துப் பின் வெளியே திரும்பிவந்து அவ்விரையை இழுத்துப் போகின்றது. ஓர் ஆராய்ச்சியாளர், ஒருகுளவி இரையை வாயிலில் விட்டு உள்ளே சென்றதும், சிறிது தொலைவில் அவ்விரையை எடுத்து வைத்தார். வெளியே வந்துபார்த்த குளவி அவ்விரையைத்தேடி எடுத்துவந்து மறுபடியும் வாயிற் புறத்தே விட்டு உட்சென்றது. மறுமுறையும் முன் செய்த

படியே ஆராய்ச்சியாளர் இரையை இழுத்து அப்புறத்தே வைக்க; குளவியும் பழையபடி இரையைக் கண்டெடுத்து வாயிற்புறத்தேவிட்டு உள்ளே சென்றது. வாயிற்புறத்தே இரையை முதலில் வைத்துவிட்டுப் பின் உள்சென்று வளையைத் துருவி ஆராய்ந்த பின்னர் அவ்விரையை உள்ளிழுத்துச் செல்வதனை ஒருகடவுட் சடங்கென எண்ணிப் பாராட்டி அதிலொன்றும் தவறாது பல முறையும் செய்தது பல முறை முயன்று பார்த்தனர் ஆராய்ச்சியாளர். ஆனால் இயற்கைச்செயலை மாற்ற முடியாமல் கைவிட்டுவிட்டார். அதனால், இதனை மடக்குத்தொடர் எனச் சிலர் கூறலாயினர். ஆனால் பின்னே வந்த மற்றோர் ஆராய்ச்சியாளர் விடாது பன்முறையும் இச் செய்காட்சியை நடத்திவந்தார். பலமுறை இரையை ஈர்த்துவைத்த போதும், மேற்கூறிய சடங்கை ஒன்றுங் குறைவுபடாமல் நடத்திக்கொண்டு வந்தது. ஆராய்ச்சியாளர் பொறுமைக்கு அளவில்லையாதலின், விடாது பல முறையும் செய்துபார்த்தனர். குளவியின் பொறுமைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. அறிவுப் பொறியும் மின்னிப் பொலிந்தது. கடைசி முறையில், இரையைத் தூக்கி அப்புறம் வைத்தபோது, குளவி வளையினின்றும் வெளியேறி இரையைக் கண்டெடுத்தது. இரையை வாயிற்புறத்தில் இழுத்துவைத்து, உள்ளேசென்று வெளிவந்து பின்னர் இரையை உடன்கொண்டு உள்ளேபோகும் சடங்கைக் கைவிட்டது. தேடி எடுத்த இரையை வாயிற்புறத்தே விட்டுவிடாது, நேரே வளைக்குள் இழுத்துச் சென்றது. எனின், இயற்கைச்செயலுக்கு வேண்டிய அளவு அறிவும் பிறந்ததன்றோ. தன் செயலை இடத்திற்கும் காலத்திற்கும் தக்கவாறு மாற்றியமைக்கும் ஆற்றலும், அக்குளவியினிடத்தே விளங்கியதன்றோ? விடா வழக்குள்ள அவ்வாராய்ச்சியாளர் ஏற்படுத்திய புதிய நிலைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளும் ஆற்றலும் அங்குக் காணக் கிடக்கின்றதே!

சில குளவிகள் வைக்கோற் புழையில் முட்டையிடுகின்றன. ஒரு வைக்கோற் புழையைத் தன் வளையாகத் தேடிவைத்தபின் இரைதேடச் செல்கின்றது. இரைதேடும்போது, தான் முன் தேடிவைத்த வைக்கோற் புழையில் நுழையக்கூடிய இரையையே தேடிக்கொண்டு வருகிறது. ஒரு வைக்கோற் புழை போல மற்றொரு வைக்கோற்புழை இருப்பதில்லையே. அப்புழையின் அளவை உணர்ந்தன்றோ அதற்கேற்ற புழுவைப் பிடித்து வருகின்றது இதுவும் புலனுணர்ச்சியின் பயன் அன்றோ? வெளியூருக்கு நமது குழந்தைகள் போயிருக்கும்போது, அவர்களுக்குக் கழற்காப்பு வாங்கச் சென்றவர்களே இதனருமையை உணர்வார்கள் என எடுத்துக் காட்டுகின்றார் மக்டுகேல் என்ற பெரியார்.

மற்றும் சில குளவிகள் சிலந்தியையே இரையாகத் தேடுகின்றன. அவ்வினத்தைச் சேர்ந்த ஒரு குளவி, ஒருமுறை சிலந்தியை அதன் வயிற்றின் புறமாகக் கவ்விக்கொண்டு பின்னாக நடந்து வளைக்குள் நுழைந்தது. சிலந்தியின் கால்கள் வளையின் மேற்புறத்தில் பரப்பிக்கொண்டன. உள்ளிழுப்பது அருமையாயிற்று. வலித்துவலித்து இழுத்துப் பன்முறை முயன்றும் பயன் இல்லாமற் போயிற்று. பின்னர்ச் சிலந்தியைப்போகவிட்டு மேலேறிவந்து, அதன் முதுகுப்புறமாகக் கவ்விக்கொண்டு, பின்னாகநடந்து வளைக்குட் சென்றது. இம்முறை, சிலந்தியின் கால்கள் குடை போல மூடிக்கொண்டன. ஒரே வகையாக நிகழும் மடக்குச்செயல்கள் போலாவது, இடத்திற்குத் தக்கவாறு மாறியமைவது நடத்தையன்றோ? ஒரு செயல் பயன்படாதபோது வேறுவகையில் அச்செயலினைச் செய்து எடுத்தவேலையை முடிப்பது அறிவு விளக்கமன்றோ?

அம்மட்டோ! மற்றொரு குளவி தரையில் வளை தோண்டி முட்டையிட்டபின் வாயிற்புறத்தை மணலால் மூடியது. பின்னர்க் கூழாங்கல் ஒன்று கொண்டு திமிசிட்டதாம். கருவியைப் பயன்படுத்திக்கொள்வது அறிவின் சிறப்பியல் அன்றோ? எனவே, இயற்கைச் செயலும், அறிவுச்செயலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகும்; ஒன்றற்கொன்று துணையாவன வாகும். இயற்கைச்செயல் ஒருகால் நிகழ்ந்தது போலவேபலகாலும் நிகழும்என்பர் அறிவுச்செயலும் ஒருவகையால் நோக்குமிடத்து அத்தகையதன்றோ? அறிவாராய்ச்சியால் ஒரு செயலைத் தக்கவழியிற் புரிந்து வெற்றியடைந்தபோது அத்தகையநிலை மறுபடியும் ஏற்படுமானால் முன்னுகர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு முன்னடந்தபடியே நாம் நடப்போம் அன்றோ? ஒவ்வொருமுறையும் புதிதுபுதிதாக நடப்பதென்றால் நமது வாழ்க்கை போமளவும் ஒரு நோயாக முடியும் எனவே அறிவுச் செயலிலும் முன்னடந்தபடி நிகழ்தல் என்ற இயல்பு காணக்கிடக்கின்றது. இடத்திற்குத் தக்கபடி மாறிமாறி நடத்தல் அறிவுச்செயலில் காணப்படவில்லையா? குளவியின் வரலாறு இதனை வற்புறுத்தவில்லையா? இயற்கைச் செயலும் அறிவுச்செயலும் இணைபிரிக்கமுடியாதபடி இயைந்து ஒன்றற்கொன்று துணையாய் விளங்குகின்றன. இயற்கைச் செயலின் கையாளாகவே அறிவுச் செயல் நிகழ்கின்றது

# தமிழ்ப் பாடம் 109.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[112-வது பக்கத் தொடர்ச்சி.]

### கிருஷ்ணன் தூதச் சருக்கம்.

போர்முடித்தா னமர்பொருது புலம்புறுசொற்
 பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார்முடித்தா னிளையோர்முன் கழறியவஞ்
 சினமுடித்தான் கடவுட் கங்கை
நீர்முடித்தா னிரவொழித்த நீயறிய
 வசையின்றி நிலைநின் றோங்கும்
பேர்முடித்தா னிப்படியே யார்முடித்தா
 ரிவனுடனே பிறப்ப தேநான். 18

இதற்குமுன் ஒரு செய்யுள் விடப்பட்டது. தருமனால் தமக்கு நேர்ந்த நஷ்டங்களைக் கூறிப் பீமசேனன் இதனில் பழிக்கின்றான்.

பதவுரை.

அமர்பொருது - சண்டையைச் செய்து, போர் முடித்தான் - பகையைத் தீர்த்து வைத்தான். புலம்பு உறு சொல் - மிகப் புலம்புகின்ற சொற்களையுடைய, பாஞ்சாலி - திரௌபதியின், பூ - அழகிய, தண் - குளிர்ச்சிபொருந்திய, கூந்தல் - கூந்தலாகிய, கார் - மேகத்தை, முடித்தான் - கட்டிவைத்தான். இளையோர் - தம்பியர்களாகிய நாங்கள், முன் - துகிலுரிந்த காலத்தில், கழறிய - சொன்ன, வஞ்சினம் - சபதங்களை, முடித்தான் - நிறைவேற்றிவைத்தான். வசை இன்றி - குற்றம் இல்லாமல், நிலை நின்று ஓங்கும் - நிலைநின்று வளர்கின்ற, பேர் முடித்தான் - எங்கள் புகழைச் செய்தமைத்தான்.

கங்கைநீர் - கங்கை ஆற்றை, முடித்தான் - முடியில் தரித்தவனாகிய, கடவுள் - சிவபிரானது, இரவு - பிச்சை யெடுத்தலை, ஒழித்த - தீர்த்த, நீ - (கிருஷ்ணனாகிய) நீ, அறிய - சாக்ஷியாக, இப்படியே - இவ்விதமாக, யார் முடித்தார் - எல்லாவற்றையும் முடித்தவர் இந்தத் தருமன்போல் வேறுயார் இருக்கின்றான்—

இவனுடன் பிறப்பதே நான் - இவனோடு நான் பிறக்கவேண்டிநேர்ந்த என் விதியை யாரிடம்போய்ச் சொல்லிக்கொள்வது.

**விளக்கம்:**—முடித்தான் என்ற வொருசொல் இச் செய்யுளில் பலமுறை பயின்று, சிறிது சிறிது வேறுபட்ட பொருளைக் குறித்து நிற்கின்றது. போர் முடித்தான், கார்முடித்தான், வஞ்சினமுடித்தான், பேர் முடித்தான், என்னும் நான்கு இடங்களிலும் 'முடித்தான்' என்பது வினைமுற்று. நீர் முடித்தான், யார் முடித்தார், என்னுமிடங்களில் அது வினையாலணையும் பெயர்.

கடவுட் கங்கைநீர் முடித்தான் இரவொழித்த நீ அறிய, என்பது பீமசேனன் கிருஷ்ணனைப் பார்த்துச் சொல்லியது. கங்கையைச் சடையில் தரித்த சிவபிரான் பிச்சை எடுக்கவேண்டி நேர்ந்ததை நீக்கிய கிருஷ்ண நீ, இத்தருமன் எங்கள் மானம் போகும்படி செய்துவருவதெல்லாம் அறியாயோ, என்பது கருத்து. பிரம்மனுக்கு முன் ஐந்துதலைகள் இருந்தன வென்றும், அதுகண்ட உமையாள், "நினக்கும் சிரமைந்து; இப்பிரம்மனுக்கும் ஐந்து சிரங்கள் என்றால், உனக்கென்ன உயர்விருக்கின்றது" எனச் சிவபிரானைப் பரிகசித்தாளென்றும், இதற்கு ஆற்றாத சிவபிரான் உடனே பிரம்மனது நடுத்தலையைக் கிள்ளிவிட்டாரென்றும், இது பிரம்மஹத்தி தோஷமாகையால் கிள்ளிய தலை சிவன் கையைவிட்டு நீங்காது மண்டை ஓடாய் உலர்ந்தும் ஒட்டிக்கொண்டே இருந்ததென்றும், இது அகல்வதற்கு என்ன செய்வதென்று பரமசிவன் பிரம்மனை வேண்டிக்கொள்ள அப்பிரமன், "இம்மண்டையோடு நிறையும்படி நீ பிச்சையெடுத்தால் அது விலகும்" என்று விதித்தாரென்றும், இதன்படி பரமசிவன் கபாலியாக எங்கெங்குஞ் சென்று எவ்வளவு பிச்சையெடுத்தும் அது நிறையாமலே இருந்ததென்றும், அதுகண்டு இரங்கித் திருமால் தன் கையால் பிச்சையிடக் கபாலம் நிறைந்து பரமசிவனது இரவும் துயரும் நீங்கினவென்றும் கூறப்பெறுகின்ற வரலாறு இதனில் அடங்கி யிருக்கின்றது.

**விரிவுரை:**—"பரமசிவனது துன்பத்தைத் தீர்த்த கிருஷ்ண, நீ யறிய நாங்கள் இப்பாடு படுகின்றோம்," என்று பீமன் கூறுவதில், "சிவபிரானுடைய இடுக்கண் களைந்த நீ, எங்கள் துயரத்தைப் போக்குவது அருமையோ" என்னுங் கருத்து அடங்கியிருக்கின்றது. இவ்விதம் ஒரு கருத்தை வெளிப்படையாகச் சொல்லாமல் அடைமொழிகளுக்குள் அமைத்துக் குறிக்கின்றதும் ஓர் அணியாம். இதனைத் தமிழில் கருத்துடை யடையணி என்றும், வடமொழியில் பரிகராலங்காரம் என்றும் அழைப்பர்.

ஓரே சொல் ஓரே பொருளிலேனும், அல்லது ஓரே சொல் பல பொருளிலேனும், அல்லது ஓரே பொருளுடைய வேறுவேறுசொற்களேனும் பலமுறை வந்து பயிலும்படி செய்யுளில் அமைப்பது பின்வருநிலையணி எனப்படும். இந்தப் பாசுரத்தில் 'முடித்தான்' என்றசொல் ஆறுமுறை வந்து, பின்வருநிலையணியை விளக்கின்றது. முன் நளவெண்பாவில், "மண்ணரசர் வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப் பொன்மாலை சூட்டினாள் பொன்" என மாலை என்னுஞ் சொல் இருமுறை வந்திருப்பதும் இவ்வணியே. அங்கு மாலை என்ற ஓரேசொல் வேறு வேறு பொருள்தர இரண்டு இடங்களில் வந்திருக்கின்றது. முடித்தான், என்று இப்பாசுரத்தில் வந்திருப்பவைகளில் 'கங்கைநீர் முடித்தான்' என்ற தொடரில் சடையில் தரித்தவன் என்று முற்றிலும் வேறான பொருளும், மற்ற இடங்களில் 'நீக்கினான், கட்டினான் நிறைவேற்றினான்' எனச் சிறிது சிறிது மாறியபொருளும் பெறுகின்றோம். இது பின்வருநிலையணி.

பின் வருநிலையணி நான்கு விதமாக வருதல்கூடும்:-

i. ஒருமுறைவந்தசொல் ஓரேபொருளில் பின்னும் பின்னும் வருதல். இதனைச் சொற்பொருட் பின் வருநிலை யணி யென்பர்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
 துப்பாய தூஉ மழை.

என்ற குறட்பா இதற்கு நல்ல உதாரணம். இங்குத் துப்பு என்னும் ஓரேசொல் உணவு என்னும் ஓரே பொருளில் பலமுறை வந்து இருக்கின்றது. சொல்லும் துப்பு என்னும் சொல்லே, பொருளும் உணவு என்னும் பொருளே. சொல்லும் பொருளும் மாறாமல் வருவதால் சொற்பொருள் பின் வருநிலை யணி என்பது இதற்குப் பேராயிற்று. (வடமொழியில் இது உபயாவ்ருத்தி அலங்காரம் என்று கூறப்படும்)

 ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
 ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
 ஆர்த்தன பல்கலை யார்த்தனர் பல்லாண்
 டார்த்தன வண்டின மார்த்தன வேலை

என்ற கம்பராமாயணச் செய்யுளும், "இவ்வளவிற் செல்லுங்கொல், இவ்வளவிற் காணுங்கொல்' என்னும் நளவெண்பாச் செய்யுளும், இவ்வகையன.

ii ஒருமுறை வந்தசொல் (ஓரே பொருளில் அல்லாமல்) வேறுவேறு பொருள்களில் பின் வருவது.

"மானை எய்தவர் இன்னும் என் மடமானை எய்திலார்," என்று முன் திருவரங்கக் கலம்பகத்தில்(வால்யூம் 2, பக்கம் 970) மான் என்ற சொல்லும் எய்தல்

என்ற சொல்லும் வேறு வேறு அர்த்தத்தில் வரும்படி அமைந்த அடியும், அதுபோல் அமைந்திருக்கின்ற அப்பாசுரத்தின் மற்ற அடிகளும், இதற்கு நல்ல உதாரணமாகும். முன் எடுத்துக்காட்டிய நளவெண்பாச் செய்யுளில் 'மாலை' என்பது இருமுறை வந்ததும் இவ்வகைத்தே. பொருள் வேறுபடச் சொற்கள் மாத்திரம் ஒன்றாயிருத்தலால், இதனைச் சொற் பின் வருநிலை யணி என அழைப்பர். (வடமொழியில் இது, சப்தாவ்ருத்தி யலங்காரம் என்று கூறப்படும்.)

தாடகையைக் கொன்று அகலிகையை அளித்த இராமனது செய்கையை, இவ்வீரன், "வாங்கியன கையாலும் ஒரு சாபம் (வில்), காலாலும் ஒரு சாபம் (சபித்தல்)" என்று துதிக்கும் வில்லிபுத்தூரர் செய்யுளடியில் சொற்பின்வருநிலையணி அமைந்திருக்கக் காணலாம்.

இப்பாசுரத்தில் 'முடித்தான்' என வருவதைச் சொற் பின்வருநிலையணி யென்னல்வேண்டும்.

iii. பொருள் வேறுபடாதிருக்கும்படி, அவ்வொரு பொருளையேதருகின்ற வேறு வேறு சொற்கள் வருதல்.

ஆறுபாய் அரவம் மள்ளர் ஆலைபாய் அமலை ஆலைச்
சேறுபாய் ஓசை வேலைச் சங்குவாய் பொங்கும் ஓதை
ஏறுபாய் தமரம் நீரில் எருமையாய் துழனி இன்ன
மாறுமா றாகித் தம்மின் மயங்குமாம் மருத வேலி.

என்னும் கம்பராமாயணச் செய்யுள் இதற்கு நல்ல உதாரணமாகும். ஒலியென்ற ஒரே பொருளைக் குறிக்க இதில் பலசொற்கள் வந்திருக்கின்றன. சொற்கள் வேறுவேறாகப் பொருள் மாத்திரம் பொருந்த வந்திருப்பதால், இதனைப் பொருட்பின்வருநிலை யணி என அழைப்பர். (வடமொழியில் இது அர்த்தாவ்ருத்தி யலங்காரம் என்று கூறப்படும்.)

iv இனி, இவ்விதமாக ஒரே அர்த்தத்தையுடைய வேறு வேறு சொற்கள் வருமானாலும் அவை ஒரு வஸ்துவைக் குறிக்காமல் உவமைவாயிலாக வேறு வேறு வஸ்துக்களை அடுத்து நிற்கலாம். தலைவியைக் கண்டு மகிழ்கின்ற ஒரு தலைமகன்,

செங்கமல நாட்டஞ் செழுந்தாமரை வதனம்
பங்கயஞ் செவ்வாய் பதுமம்போற்—செங்கரங்கள்
அம்போ ருகந்தா ளரவிந்தம் மாரனார்
தம்போர் உகந்தாள் தனம்.

என்று புகழ்வதில், அவளது கண்முகம் வாய் கை பாதம் ஸ்தநம் ஆகியவைகள் அனைத்திற்கும் தாமரையையே உவமையாகக்கொண்டு அத்தாமரையென்பதைக் கமலம் தாமரை பங்கயம் பதுமம் அம்போருகம் அரவிந்தம் என்ற வேறுவேறு சொற்களால் செப்புகின்றான். இதனை, உவமைப் பொருட்பின்வருநிலை யணி என்னலாம். [மாரனார்தம் போர் உகந்தாள்,—மன்மதனுடைய காமப்போரைப் விரும்பினவள்]

---

பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா
 ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
குருகுலத்தோர் போரேறே குற்றமது
 பார்க்குங்காற் சுற்ற மில்லை
யொருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும்
 வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ
இருவருக்கும் வசையன்றோ விருநிலங்கா
 ரணமாக வெதிர்ப்ப தென்றான் 14.

[பீமனது வாசகமான ஒரு செய்யுள் இதற்குமுன் விடப்பட்டது. இதனில் பீமனைத் தருமன் சாந்தம் செய்ய முயல்கின்றான்.]

பதவுரை.

பரிவுடன் - வருத்தத்துடன், இவை - இவைகளை, கூறும் - சொல்லி வருகின்ற, பவன குமாரனை - வாயுவின் மகனாகிய பீமசேனனை, (தருமராசன்) மலர்க்கை - தாமரைமலர்போன்ற தன் கைகளால், பணித்து (சும்மாவிரு என்று) அமர்த்தி, நோக்கி - அவனைப் பார்த்து,

குருகுலத்து - நம் குருகுலத்திலே, ஓர் - ஒப்பற்ற, போர் ஏறே - போர்வல்ல ஆண்சிங்கம்போன்றவனே,

குற்றம் அது - குற்றத்தையே தேடித்தேடி, பார்க்குங்கால் - பார்ப்போமாயின், சுற்றம் இல்லை - உறவினர் என்பவர் நமக்கு ஒருவரும் இருப்பதென்பதே இயலாமற்போய்விடும்;

ஒரு குலத்தில் - ஒரேகுலத்தில், பிறந்தார்கள் - பிறந்தவர்கள், உடன்வாழும் - சேர்ந்து வாழ்கின்ற, வாழ்வினைப் போல் - வாழ்வைப் போல, உறுதி உண்டோ - நன்மை தரத்தக்கது வேறு உண்டோ!

இரு - பெரிய, நிலம் - இந்த நாடு, காரணமாக - காரணமாக, பொருதல் - போர் செய்வது, இருவருக்கும் - நம் இருதிறத்தவர்க்கும், வசை அன்றோ - பழிப்பிற் கிடமாகாதோ,

என்றான் - என்று தருமன் கூறினான்.

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய் மொழி.

முதல்பத்து விமர்சம்.

114-வதுபக்கத் தொடர்ச்சி.

இம்மாண்புபெற்ற பிரபந்தத்துக்கு நாம் புதிதாய் உரையிட உத்தேசிக்கவில்லை. அதைப் படிப்பவர் பழைய உரைகளைக்கொண்டும் அவரவர்களுக்கு வாய்க்கும் ஆசான்களைக்கொண்டும் படித்தும் கேட்டும் பொருள்உணர்ந்துகொள்ளலேநலம்.

நல்ல ஆசான் வாய்க்காதவர்களுக்கும், ஒருவாறு தம் கையிலுள்ள உரைகளைக்கொண்டு பொருள் தெரிந்துகொள்ள முயற்சிப்பார்க்கும், ஸஹாயார்த்தமாய்க் "கச்சத" டிப்பனியாய் விசேஷங்களைமட்டும் ஆங்காங்கு விளக்கக் கருதுகிறோம். கற்க முயலுவார் கையில் உரைகளிருந்தாலும், சிற்சில விடங்களில் உதவியில்லாமையால் இடர்ப்பாடு உற நேரலாமாதலின் ஆங்காங்குப் பதவுரையும், சிற்சில இடங்களில் பொழிப்புரையும் வரைந்து உபகரிப்போம். முக்கியமாய், ஆங்காங்குள்ள சுவாரச்யங்களை எடுத்துக் காட்டுவதும், ஆராய்ச்சிகொண்டே அறியப்படுவனவாய் ஆழ்ந்துகிடக்கும் பொருள்களை மேலெடுத்துவிளக்கிக்கொடுப்பதுமே நாம் தற்காலம் பூண்டிருக்கும் கடமை. பழைய உரைகள் ஸம்ஸ்கிருத சைலிகளில் பெரும்பான்மை அமைந்திருப்பதாலும், தமிழும் ஆரியமும் கலந்த மணிப்பிரவாள ரூபமாய்க் கிடப்பதாலும், இவைகள் எல்லாருக்கும் புலப்படுவது அரிதாகையால் யாம் செய்யும் முயற்சி பலர்க்கு நற்றுணையாய் நின்றுதவுமென்று கருதுகின்றோம். இப்பிரபந்தத்தைப் புதிதாய்க் கற்பவர்கள் முதல்தசகத்திற்கும் அடுத்த த்சகத்திற்கும் என்னதொடர்ச்சி என்று உரைகாரர்களது உதவிகொண்டே அறியவேண்டும். பெரும்போக்காய் நோக்கும்போது இக்கிரந்தம் வழியில்லாக் காடுபோல் தோன்றும். முழுப்பிரபந்தமும் செவ்விதின் முயன்று படித்தபிறகுதான் இது ஒன்றின்பின் மற்றொன்றாய்த் தசகங்கள் தொடர்ந்து நடக்கும் ஒரே நூலென்று புலப்படும். இப்படி ஆராய்ச்சியுடன் கற்றறிந்தே,சந்தர்ப்பங்கள் இங்ஙனே வாய்ந்ததென்று உரைகாரர் நிர்வாஹம் கூறியிருக்கிறார்கள். அவ்வுரைகாரர் உதவிகொண்டே சந்தர்ப்பங்களும் தொடர்ச்சியும் அறிந்து ஓதுங்கால் இப்பிரபந்தம் உணர்வதற்கு எளிதாகும். இத் தொடர்ச்சிக் குறிப்புக்கு"அவதாரிகை" (முன்வழி காட்டல்)என்று பெயர். அநேக தசகங்களுக்கு நாம் அவதாரிகையை எடுத்து எழுதுவோம். ஆங்காங்கே, இப்பிரபந்தம் கூறும் வேதாந்த தத்துவங்களையும் நாம் எடுத்துரைப்போம்.

குருவணக்கம்.

"அருமறைகள் அந்தாதி செய்தா னடியிணையை
யெப்பொழுதும் சிந்தியாய் நெஞ்சே தெளிந்து"
மதுரகவி.

திருவாய்மொழிக்கு அவதாரிகை.

இந்தத் திவ்வியப் பிரபந்தத்தில் பிரதிபாதிக்கப்படுகிறவன் ஸ்ரீயப்பதி நாராயணன். அவனே முடிவில் அடையப்படும் பரம்பொருள். அவனை அடைவதற்கு அவனே உபாயம். இவ்விரண் டாகாரமும் இப்பிரபந்தத்தில் பரக்கக் கூறப்படுகின்றன.

அடையும்பொருளை உபேயமென்றும் அடைவதற்குரியதாய நெறியை உபாயமென்றும் வேதாந்திகள் கூறுவார்கள். அதன் வரலாறு பின்வருமாறு:—முதற்பத்தில் ஸ்ரீயப்பதியின் உபாயத்துவமும் இரண்டாம்பத்தில் உபேயத்துவமும்,மூன்றாம்பத்தில் இவ்வுபாய உபேயங்களுக்குச் சாதகமான திவ்வியமங்கள விக்கிரகமும்சொல்லப்படுகின்றன. ஏனைய மார்க்கதரிசிகளுக்கும் வைணவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அடிப்படையாகக்கொண்ட பகவானுடைய திவ்விய மங்கள விக்காஹத்தைக் கூறி அதில் பக்திவழிபாடுகள்செய்ய இவ்வாழ்வார் கற்பித்துப் பிரபந்தத்தை அருளிச்செய்கிறார். மூன்றாம் பத்தில் பரக்கப்பேசிய உபேயத்துவத்தைத் தொடர்ந்து தற்காலம் புத்தியஸ்தமான உபேயத்துவத்தையே நாலாம்பத்து விஸ்தரிக்கிறது. மேல், ஐந்துமுதல் கடைசிப்பத்து அகப்பட எல்லாப்பத்துக்களும் உபாயத்துவத்தையே விஸ்தாரமாகப் பேசுகின்றன. இப்பிரபந்தத்தில் ஆழ்வார் அருள்வன இரண்டு. ஒன்று — நித்தியவிபூதி யோகம்; அதாவது, அப்பிராகிருதமாய், அதைப்போன்று மற்றொன்றில்லாத அசாதாரணமாய்த் திவ்வியமான ஸ்தானவிசேஷமான வைகுண்டத்தில், அதற்குச் சதர்சமான பரிஜனங்கள் உபசரிக்கத் தாமும் தம் மஹிஷிகளும் நித்திய யுவத்துவத்தோடு, அந்த லோகத்துக்கே அஸாதாரணமாய் உரித்தானபூஷணங்களை அணிந்து வீற்றிருந்து, அந்த ஆனந்தமயமான லோகத்தையும் தாழ்ந்த பிருகிருதிமண்டலங்களையும் செங்கோல் செலுத்தச் சூசகமாய்ச் சங்கம் சக்கராயுதம் போன்ற மற்றும் திவ்விய ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு பரமகாருணிகனாய்த் திருமாலார் பரவ்யூகாதி திவ்விய விக்கிரக விசிஷ்டனாய் அற்புதமான ஆநந்தாநுபவம் செய்யும் யோகம். மற்றது—லீலாவிபூதி யோகம்; அதாவது, பிருகிருதி சூக்ஷ்மத்தால் அமைந்து நம்மை வாழ்விக்கும் பூலோகம்போல் அவனுக்கு "விளையாட்டாய்" ஆக்கிக்காத்து அழிக்கும் இன்பரசத்துக்கு உரித்தான மற்ற லோகங்களின் காரியம். இவ்விரண்டையும் உரிமையான (விபூதி) பெருஞ் செல்வமாய் உடைத்தாயிருக்கிற பரமபுருஷனை உள்ளபடியே ஆழ்வார் தாம் திருவுள்ளத்தாலே அநுபவித்துத் தாம் அநுபவித்தவளவில் நின்று விடாமல் அவ்வநுபவத்தினாலுண்டான நிரவதிகப் பிரீதியாலே தாம் அநுபவித்தபடியே பேசுகிறார். இவ்வண்ணம் தாம் அநுபவித்தபடி திருவாய் மலர்ந்தருளியதே திவ்விய பிரபந்தமான திருவாய்மொழி.

இவ் வவதாரிகையில் தோன்றக்கூடிய ஆக்ஷேபங்களும் அவைகளுக்கு உரைகாரர்கள் காட்டிய சமாதானங்களும் பலவுள. அவற்றை இவ்விடத்திலுரைப்பது நலமாகும்.

பொய்ந் நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கமும் தவிர்க்கவேண்டுமென்று திருவிருத்தத்தில் பகவானை வேண்டிக்கொண்ட ஒருவர் செய்தருளிய பிரபந்தம் பிரமாணமாகுமோ? கர்மவசியர்க்குப் பிரமம் அஜாக்கிரதையால் வரும் பிரமாதம் ஸம்பாவித மல்லவோ? என்ற சங்கைகளுக்கு நிர்வாஹகமாய் இவர், பகவானுடைய சுவரூப குண விபூதி சேஷ்டிதங்களில் கொஞ்சம்கூடத்தப்பாமே உள்ளபடியே உணர்ந்தவர் ஆகையால் பிரமாணமாகக் கூடுமென்று கொள்ளல்வேண்டும். இவர் இருஷி யல்லரே, மனிதர் வம்சத்தில் அவதரித்தவருக்குப் பூர்ணஞானமும் திரிகால ஞானமும் வாய்க்குமோ என்றசங்கை பரிகாரத்துக்காகத் "தாம் அநுபவித்தாரென்று" கூறுகிறார். இவர் மஹரிஷிகளுக்கும் மேலாய் "மத் சித்த மதகத பிராணர்' என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பணித்தபடி, பிறந்ததுமுதல் அவன் திறத்தே ஆஹார நித்திராதிகள் இல்லாமலே வீழ்ந்து கிடந்தவராகையால், ரிஷிகளைக் காட்டிலும் உத்கிரஷ்டரென்பது சமாதானம். இம்மஹானுக்கு யார் தான் உபதேசம் செய்தார்? எங்ஙனே இவருக்கு ஞானம் வாய்த்தது? என்ன தபசு முயற்சியால் இவ்வேற்றம் சம்பவித்தது? என்றால், ஸர்வேச்வரன் யாதொரு காரணமுமின்றியே இவருக்கு ஞானப்பிரதானம் செய்தது ஏனென்னுங் கேள்விக்குச்சமாதானம், முதற்பாட்டில் "மதிநல மருளினன்" என்பதாலே விளங்கக்கிடக்கிறது. ஸர்வேச்வரனைக் கண்டறியப் பிழைத்திருப்பவ ரில்லையோ? அவன் அநுமாநத்தால் சித்திப்பவனன்றோ? ஆகையால் அவன் சாஸ்திரத்தால் உணரவேண்டியவனாயிருக்கிறானே. இப்படி யல்லவோ வியாஸபகவான் அறுதியிட்டிருக்கிறார். ஆனால் நம்மாழ்வாரோ சாஸ்திர உபதேசம் பெற்றவரல்லரே என்ற ஆக்ஷேபங்களுக்கெல்லாம் சமாதானம், காரணவிசேஷமின்னது என்று அறுதியிடுவதற்கு அரியதாய் இருப்பதொரு

பகவத்கடாக்ஷம் இவருக்கு அனுக்கிரகமாய் வாய்ந்தது என்பதாம் இக்கடாக்ஷம் சுவயபத்நமொன்றுமின்றியே இம்மஹானுபாவனுக்கு ஏற்றமாய் ஏற்பட்ட ஓர் அதிசய சக்தி. ஒன்றும்பத்து பத்தாவது தசகத்தில், தம்நெஞ்சிற்கு அயத்நமாய் வந்துதித்த அநுபவத்தைச் சுவ வாக்கியத்தாலே "கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று ஓர் எண்தானும் இன்றியே வந்து இயலுமாறு" என்றுரைப்பதைக் கொண்டு நாம் அறியலாம். இராமாயணம் பாகவதம் மஹாபாரதம் முதலான இதிஹாஸங்கள் ஒரு ஆர்த்தன் கேட்க மற்றொரு ஞானி உபதேசிக்க நேர்ந்தனவாக அல்லவோ ஏற்படுகின்றன. அப்படிக்குக் கேட்பாரில்லாமல் தனக்குத் தான்தோன்றியான கிரந்தம்பிரமாணமாகுமோ? என்ற சங்கைக்குப் பரிஹாரம் இம்மஹானுபாவன், கியாதிலாப உத்தேசங்கள் ஒன்றுமில்லாமலே தன் திருஷ்டிக்குக் கோசரமாய் வந்ததை வந்தபடியே பிரீதி உள்ளடங்காமையாலே பேசுவதால் பிரமாண மாகக்கூடுமென்று கொள்ளவேண்டும். "சொன்னால் விரோதம்" என்ற தசகத்திலும் "ஒரு நாயகம்" என்ற தசகத்திலும் இவர் கூறுவதே இதற்குப் பிரமாணம். உரைப்பது யாரானாலும் தாம் கண்டதை 'மிகைபடக்' கூறல் ஸம்பாவிதமே என்ற சங்கைக்குப் பரிஹாரம் இவர், "பொய்யில் பாடலாயிரத்துள்" என்றும், "தப்புதலின்றித் தன்னைக் கவிசொல்லி" என்றும், 2-ம் பத்து, 6ம் தசகம் 11-வது பாசுரத்தில் "குருகூர்ச் சடகோபன் தெரிந்துரைத்த குழாங்கொள் ஆயிரத்தும்" என்றும் கூறுவதால் மேல்கண்ட சங்கைக்கு இடமே இல்லை என்பது புலப்படும்.

இப் பிரபந்தத்திற்கு முக்கிய விஷயம் பரமபுருஷனே என்பதை அதற்கு அறிகுறியாக முதல்பாட்டில் அவனைப்பற்றிக் கூறுவதாலும், அவனே தன்னை இறுதியில் "சூழ்ந்ததை"ப்பற்றிப் பிரபந்தத்தின் முடிவில் கூறுவதாலும் அறியலாம். நடுவில் கிடப்பதெல்லாம், அவாந்தரமாய்த் தாம் அவனை அநுபவித்ததில் வந்து உதித்த பிரமேயங்களே யாம்.

முதல் தசகத்துக்கு அவதாரிகை:—

"உயர்வற" என்கிற முதல்பாட்டில் நித்திய விபூதி யோகத்தைச் சங்கிரகமாய்க் கூறி, மூன்றும்பாட்டு தொடங்கி லீலாவிபூதியோகத்தை ஸங்கிரகமாய் அருளிச்செய்கிறார். பரத்துவத்தையும் ஸௌலப்பியத்தையும் ஒருவாறு சொல்லியதாயிற்று. இரண்டாம் தசகந்தொடங்கி அவைகளைப்பற்றி இம்மஹானுபாவன் விஸ்தரிக்கப் போகின்றார். முதற்பாட்டில், எம்பெருமான் திருவடிகளில் மனோ வாக்கு காயங்களால் நித்திய கைங்கரியம் செய்யென்று தம் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறார். ஏனைய பாட்டுக்கள் அவன் சுவரூபத்தைச் சோதித்து அவனது மேம்பாடுபெற்ற விபூதிகளை ஆராய்கின்றன.

முதல் பாசுரம்

உயர்வற வுயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே

இப்பாட்டுக்கு இரண்டு மூன்று விதமாய் அந்வயம் கூறலாமானாலும், நாம் இங்குச் சரசமான அந்வயமே எடுத்துக் கூறுவோம்.

[அதாவது—உயர்வற உயர்நலம்உடையவன்யவன் —அவன் மயர்வற மதிநல மருளினன். மயர்வறு மதிநலம் அருளினன் யவன்--அவன் அயர்வறும் அமரர்களுக் கதிபதி. அயர்வறும் அமரர்களுக்கு அதிபதி யவன்—அவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே]

[உயர்வு - மற்றொரு வஸ்துவுக்கு இதைவிட மேன்மை, உயர்வு அற - அறும்படி - இல்லாதபடி - தாத்பரியம்-நிரதிசயமான. உயர் - உயர்ந்த; நலமுடையவன் - நித்திய நிரதிசய ஆனந்தத்தை யுடையவன்- (நலம் சபதம் ஆநந்தம் முதலான அநந்த கல்யாண குணங்களைக் குறிக்கிறது.) யவன்-யாவனொருவன் பெரும்புகழ் பெற்றவன். அவன் - அந்த ஆநந்த குணமுடையவன்; இதற்கு அருளினனென்கிறதோடு அன்வயம். மயர்வு - அஞ்ஞானம். அற - அறும்படி, மதி - ஞானத்தையும், நலம் - சிநேகத்தையும் பக்தியையும். அருளினன் - தந்தருளினன். "எனக்கு" என்பது தொக்கு நிற்கிற தறிக. மயர்வற மதிநலம் அருளினன், அருளினவன்-யவன் - யாவனொருவன். அயர்வு - மறந்துபோதல், அற - அறும்படி அதாவது, இறப்பு நிகழ்வு எதிர் என்னும் எக்காலத்திலும் மறவாத - ஸதா ஸர்வஞ்ஞான நித்தியாஸூரிகளுக்கு அதிபதி - புருஷார்த்தத்தைக் கொடுப்பவரான-அவன்-அந்த நித்தியாஸூரிகளுடைய அதிபதியின், துயர் அறு-ஆசிரதர்களுடைய ஸர்வதுக்கங்களையும் போக்கடிக்கக் கூடிய, சுடர் அடி- அப்பிராகிருத தேஜோமயமான திருவடிமலர்களை. தொழுது - ஸேவை செய்து - என்மனனே-என்னுடைய மனஸே. நீ எழு-பெருகு, நாளுக்குநாள் அதிகமாகி உஜ்ஜீவி, உன் சுவரூபத்தை அடை—அதாவது ஸர்வவித கைங்கரியத்தையும் செய்] நிரதிசயமான ஆநந்தம் என்பது மற்றக் கலியாண குணங்களுக்கும் உபலட்சணம்.

நித்திய நிரதிசயமான ஆநந்தத்திற்கு உயர்வுதாழ்வு உண்டோ? மனதின் இவ்வின்ப நிகழ்ச்சியில் தாரதமியம் எங்ஙனே வரும், என்ற சங்கை பரிஹாரமாக உரைகாரர்கள், (எள்ளளவும் தோஷம்தட்டாத, அதாவது அல்பம் அஸ்திரத்துவம் முதலிய) குற்றங்களில்லாத ஆநந்தம், என்று நிர்வாகம் செய்திருக்கிறார்கள். "ஆநந்தம்" என்கிற குணத்தோடு உபநிஷத்துக்கள் "ஸத்தியம்" (அதாவது அழியாமை) ஞானம்- ஆநந்தம்-நித்திய யுவத்துவம்-முதலான குணங்களைக் கல்யாண குணங்களாகக் கணக்கிட்டு இருக்கின்றன. பகவானை ஸேவைசெய்பவர்களுக்கு அத்தியந்தம் அவசியமான ஸௌலப்பியத்தையும் (பரமகருணை) வேதமும்இதிஹாஸங்களும் கல்யாணகுணங்களில்சேர்த்துப் படிக்கின்றன. ஷட்குணங்களில் (ஆறு குணங்கள்) மற்றைய கல்யாண குணங்களை இவ்விடத்தில் வரைவோம். ஆசிரதர்களைக் காப்பாற்றும் தன்மை; தயை; சாஸ்திரஞானம்; சீலம்—அதாவது நல்ல நடவடிக்கை; தமம்—அதாவது வெளியிந்திரியங்களை அடக்கல்; சமம்-மனதை அடக்குதல். வால்மீகி ராமாயணத்தில் "தர்மக்ஞஸ்ய கிருதகஞ்ஸ்ய ஸத்தியவாக்கியோ திருடவிருத" என்று தொடங்கிக் கூறியுள்ள ஸ்ரீராமபிரானது குணங்களையும் சேர்த்து அநுஸந்திக்க. "உயர்வற" என்ற அடைவில் "மனுஷிய ஆநந்தத்தில் நூறுமடங்கு அதிகம் தேவதையின் ஆநந்தம்; தேவ ஆநந்தத்திற்கு நூறுமடங்கு அதிகம் பிரஜாபதி ஆநந்தம்; பிரஜாபதி ஆநந்தத்திற்கு நூறுமடங்கு அதிகம் பிரமாநந்தம்" என்று கூறும் உபநிஷத்தைக்கொண்டு கணித்து உயர்வு கூறி, நித்திய நிரதிசயத்துவ ஆநந்தம் பகவானுடையதென்று கூறலாமன்றோ? எந்தக் கல்யாண குண மிருப்பினும், நமக்கு "மயர்வற" ஞானமும் சிநேக பக்திகளையும் கொடுத்துதவியதே மிக்க உயர்ந்ததென்றும், அம்மஹாகுணங்களின் சிறந்த பலன் அதுவே என்றும் ஆழ்வார் கூறுகின்றார்.



அமரர்க்கு அதிபதிஎன்ற இடத்தில்"அதிபதி" சப்தத்திற்கு யாஜமான்னியத்துவம் பொருளாயிருக்கப் "புருஷார்த்த நிர்வாஹகன்" என்று உரைகூறியது எங்ஙனே என்னில், வைகுண்டத்தில், அதாவது ஸாயுஜ்யதெசையில், பகவானுக்கும் ஸுக்களுக்கும் (நித்திய முக்தர்கள்) ஆனந்தத்தில் ஒன்றும் தாரதமிய மில்லாமைபற்றி, இவர்களுக்கும் பகவானுக்கும் வைணவர்கள் கூறும் வித்தியாசம் அவனுக்கு லோக வியாபார முண்டு; இவர்களுக்கு அது இல்லை என்பதுமாத்திரமே.

துயரறுசுடர் அடி - துயராகிற அநிஷ்டத்தை முதலில் சொல்லி அதை அறுத்து உதவுகிற திருவடிகளாகிற உபாயத்தைக் கூறுகிறாரென்று தாத்பரியம்.

உபேயமும் அத் திருவடிகளே யாகையால் உபேயத்துவமும் செப்பியதாயிற்று

மனசு அசேதனமானாலும் அதை "மனன்" என்று ஆளாக்கி அதற்கு உபதேசிக்கிறார்:—

தன்னைத்தான் தாஸன் என்றும், தாஸனது பிரயோஜனம் தன்னை ஆளாகஉடைய ஸ்வாமிக்குக் கைங்கரியம் செய்யும் உரிமையே யென்றும், உஜ்ஜீவிக்க ஞானம் ஹேதுவாகையால் "எழு" (Fulfill yourself) என்றும், தம் திருவுள்ளத்திற்கு ஆழ்வார் புத்திமதி கூறுகின்றார்.

## இலஞ்சிப் பாவை.

### 6. இராதாகிருஷ்ணன் வருகை.

[116 வது பக்கத் தொடர்ச்சி]

"முன்னொருமுறை திக்குவிஜயஞ் செய்து வாகை சூடி, எனது போர்வீரர் கைபற்றிய எதிலார் கொடிகள் எனக்குமுன் செல்லவும், இராதாகிருஷ்ணன்போன்ற இருபதுவீரர் தொழுத கைகளுடன் என்பின் வரவும், வெற்றிவீரனாய் நான் நகரத்துட் புகுந்தபோது, எனது விதர்ப்பினைமகிழ்ந் தினிதுபாடி முன்சென்றவரில் முதன்மைபெற்றவன் ஆலாலன் தான். பண்டைக்காலப் பெருமையையும் எனது தற்காலப்புன்மையையும் எண்ணி நைகின்றானிவன். ஆயினும், ஆடம்பரங்கொண்ட முன்னாளில் நானடைந்திருந்த உவகையைவிட, இந்நாள் செல்வமற்ற என்னிடம் அற்றகுளத்தி னாம்பல்போல், ஒட்டி யுறவு கொண்டு, கலங்கிய கண்ணினனாய்த் தன்னுள்ளன்பை உணர்த்துவிக்கும் இவனது உண்மைநிலையும், கண்டவுடன் முகம்விண்டு ஆர்வம் பொங்கும் எனது அருஞ்செல்வியின் செயலுமே எனக்கு அடங்கா அகமகிழ்ச்சியைத் தருகின்றன. இவ்விருவரது பேரன்பிற்கு நிகருண்டோ இழந்துபோன இருஞ்செல்வம்?" என ஸ்ரீபாலன் சாற்றினான்.

கோடைவெயிலில் கொளுந்திவாடிய கொடியின் மீது விசும்பின் துளி வீழ, அது பசுமையுறப் படர்ந்து, தன்னகத்தே கொண்ட களிப்பினை அலர்ந்த மலர்களின் முகத்தாற் காட்டல்போல், இதுவரைத் தந்தையைக் காணாது தளர்ந்த சுதஞ்சனை, அவரது மொழிகளாற்கொண்ட களிப்பே ருவகையைத் தன் மலர்ந்த முகத்திற் காட்டிநின்றாள். தாதை புகழ மால்வண்ணனவ் விசையினை இசையெனக் கேட்டதாலுண்டான நாணை, நாய்களை விளித்தும், தோளிலுற்ற கிள்ளையொடு கிளத்தியும் மறைத்தனள் அம் மடமாது. அசுழங்களும் அவளருள் வேண்டி அருகுற்று முகத்தைநீட்டியும், வாலைக்குழைத்தும், குறுகக்குரைத்தும், தாவியும் துள்ளியும் காலிற்சூழ்ந்தும், குதித்தோடியும் களியாட்டயர்ந்தன. கற்றமொழிகள் பலபேசிப் பைங்கிளியும், கந்தரம் நீட்டித் தலைசாய்த் தோர் கண்மூடி யொற்றைக்கண்ணினா லவளை யுற்றுநோக்கிக் களிகூர்ந்தது. இவைகளின் நிலை இன்னவாறாக, மால்வண்ணனும் மதர்ப்புறு மங்கையின் பேரெழில் கண்டும், அவளது நற்குணங்களைத் தந்தையால் நவிலக் கேட்டும் மகிழ்ந்து கரந்தபார்வைகள் பல அணங்கின் மேற் செலுத்திக் காதல் காட்டிநின்றான்.

பருமனற் றுயர்ந்திருந்தது அவனுருவம். ஆயினும், திரண்டதன் உடலத்திலொரு வாரணத்தின் வலிமை தாங்கினான். பருவரல் காணிற் பரிந்திரங்கியும், கவலையுற்றவழி கருணைகாட்டியும் நின்ற பெரிய கண்களும், நீண்ட மூக்கும் கொண்ட அவன்வதனம் ஆடவர்க்குகந்த அழகுபெற்று விளங்கிற்று. ஒவ்வோரிடத்திற்குஞ் செல்லும்நேர்ப்பாதைகளிலும், கிளைவழிகளிலும் அவனறியாத தொன்றில்லை. பருப்பதங்களிற் குறுக்கிடு படுகரும், நீர்வழிச் செல்லும் நெறியும் அவன் பழகியவைகளே. அவன் நாணேற்றி வில்வளைத்தபின், துள்ளினும், பாய்ந்தோடினும் அம்புசெல் லாறுநீங்கி விலங்குகள் விலங்குவதில்லை. மானொன்றைப் பின்தொடர்ந்து செல்லின், விதிர்ப்புறு விலங்கு அணங்குஉந்தக் கடுகித்தாவினும் அவனது கதிக்குத் தப்புவதரிது! இப்பந்தயத்தில் நவ்வி கெட்டுயிர்க்குமேயன்றி மால்வண்ணன் பெருமூச்செறிவதில்லை. உருவத்திற்கேற்ப அவனது உள்ளமும் உயரறிவு பெற்று, அன்புகுடிகொண்டு, வள்ளன்மை பூண்டு பழியிலா வெண்டன்மை யுற்றிருந்தது. அவன துயிர்வாழ்க்கையிற் சுதஞ்சனை சுழலாமுன்னம், அவலக் கவலையற்றுக் ககனமுலவும் பிணிமுகமென்னக் களித் துலவிவந்தான். கையா றழுங்கல் காதலென்னும் பிணிகளவனைப் பீடித்தில. அவனுக்குற்ற உயிர்நண்பர் பலர், அவன் குற்றங் கடிந்துரைத்தலையும் பிறர் துன்புற்றவழி துடித்தயர்தலையும், உண்மையுரைப்பதி லவனுக்கிருந்த உறுதிப்பாட்டையுங் கண்டு, காளைப்பருவம் நீங்கி வன்மையுறு மானிடனாகுந் தருணம் வாய்க்கின் மலைநாட்டில் இராதாகிருஷ்ணன் புகழ்மங்கிஇவனது ஏற்றமே மீக்கூறடையுமென்று மொழிந்தனர்.

அன்னவனோடனைவரும் படகேறி வீடுநோக்கி ஏரியின்மேற் சென்றனர். செல்லும் வழியிற் சுதஞ்சனை ஸ்ரீ பாலனைநோக்கி, வேட்டையாடி வெகுதூரம்

செல்வ தெதற்கென்றும், பலநாட் பிரிந்திருக்கக் காரண மென்னென்றும் வினவினள்.

ஸ்ரீ—குழந்தாய்! தற்காலம் வேட்டையே போலிப் போராய் என் உள்ளத்தைக் கவர்கின்றது. அஃதொழிய எனக் கறிவுசெல்லும் வழி வேறில்லை. ஓர் பொழிலில் நெடுவழியேக அவ்விடம்மால்வண்ணனைக் கண்டேன். அச்சமயம் அரசனைச் சேர்ந்தவர் வெம்பரியேறிய வேட்டைவீரர் பலர் சுற்றுப்புறங்களிற் றேடித் திரிவதா யுணர்ந்து, இக்காளையி னுதவி கொண்டு, யாருமறியாக் கிளைவழி பல நாடிச் சுகமே இவ்விடமடைந்தேன். அரசனது ஆணைக்குட்பட்டு அவனது பாமரிப்பி லிருக்குமிவ் விளைஞனும், தன்னுயிர்க்குறு தீங்கினைக் கருதாது, வீரரெம்மைத் தொடர்வதையும் பாராது, கவர்வழி பலவற்றில் கரந்தேகி இவ்விடங் கொணர்ந் தென்னைச் சேர்த்தான். இனி இராதாகிருஷ்ணன் உற்ற சினத்தினையவித்து, ஆறியமனதி னமைதியையே கடைப்பிடித்து என் பொருட் டிவனை யவன் வரவேற்கச்செய்யவ தென்கடமை. இரவு நீங்கியபின் னிவனும் தன்னூரை யடைவதுடன், என்பொருட்டு மீண்டும் தன்னுயிரை இடுக்கணுக் கிலக்காக்காம லிருக்கவேண்டும்.'' என்றான்.

இவர்களை யெதிர்கொள்ள விரைந்த இராதாகிருஷ்ணன், மால்வண்ணனைக் கண்டு முகங்கருகினனேனும், வார்த்தையாற் செயலாற் றன் வன்மையை வெளியிட்டிலன். முகந்திரிந்து நோக்கியும் விருந்தினன் மனதையூறுபடுத்தியிலன். வேட்டைப் பேச்சிலும் வெறும் பேச்சிலும் காலை முழுவதுங் கழிந்தது. நடுப்பகலில் ஒற்றனொருவன் இராதா கிருஷ்ணனோடு நெடுநேரம் தனித்துரையாடிச் செல்ல, அதன்பின் கனன்ற அவன் முகமும், கடுகடுத்த சொல்லும், தூரநோக்கும், தீர எண்ணமும், கேட்டது கேடுறுமொழி யெனத் தோற்றுவித்தன. அவ்வாறிருந்தும் இரவு நீண்டு, உணவு கொள்ளு மமயம் கிட்டியபின்பே, அவன், மாலினியையும் ஸ்ரீபாலனையும் மட்டவிழ் கூந்தல் மங்கையையும் மால்வண்ணனையும் ஒருங்கு கூட்டினன். கூட்டியபின் பவர்களைச் சுற்றி நோக்கிச் சிறிது நேரம் நிலனைப்பார்த்து, உறுத்தாச் சொற்களை யரிப்பரித் தெடுப்பவன்போல் சோர்வுற்று, நெடுநேரம் உடைவாளிற் கைபொதிந்திருந்து பின் தலை நிமிர்த்திப் பேசலாயினன்:—

"நான் சொல்லப் போவதை இன்று சுருக்கமாய்ச் சொல்லி விடுகின்றேன். எனக்குத் தேனொழுகப் பாலொழுகப் பேசத்தெரியாது. என்னியற்கை மனதிலிருப்பதை வெட்டெனப் பேசுவதுதான்.

"ஐய! தந்தை யெனத்தகுந் தகைமையாளரே! மேன்மையுடைய அன்னையே! சுதஞ்சனா—ஓ! ஏன் முகத்தைத் திருப்பிக்கொள்ள வேண்டும்? பகைவனை நண்பனுயநம்பியோ வெண விரைவில் வெளிப்படுத்த வேண்டிய மால்வண்ண! அனைவரும் செவிகொடுத்துக் கேளுங்கள்: வன்மங் குடிகொண்ட மனதினனாகிய நமதரசன் மலைநாட்டெல்லையில் வேட்டையாடும் வியாஜம்வைத்து வீரருடன் போந்து, அவ்விடம் அவனுடன் வேட்டஞ் செய்யஎண்ணிக் கூடிய தலைவர் பலரைக்காரணமின்றி எதிர்த்துச்சிறைப்படுத்தினனும்; அரசனுக்கு விருந்திட வெண்ணி அன்புடன் திறந்த அரண்மனை வாயில்களிலேயே வீரர்பலரைத் தூக்கிலிட்டு அடாத செயலைச் செய்திருக்கின்றானும் பனியுறை பழுவமெங்கும் புலானீர்; நதிதரு புனலெல்லாஞ் செந்நீர்; செம்மலருடைச் சாரலெங்கும் சோரி. குருமன்னர்குருதி, நாடெங்கும்படிந்து பழி வாங்க வேண்டுகின்றது. இதோடு இக்கொடுங்கோல் மன்னன், இரக்கமென்ப தறியா இருப்பு மனத்தன், இவ்விடமும் வருகிறானும். காரணம்? முன்சொன்ன வேட்டையே! ஆயினும் முடித்தலைவர் முடிவே நமது முடிவும். இன்னுமொரு விசேடம். எங்குச் சென்றாலுங் குறிக்கொளத்தக்க ஸ்ரீபாலாது உருவம், அரசபரிவாரத்தார் கண்ணில் நேற்று அகப்பட்டதாம். இச்சமயம் நாம் என்ன செய்வது சொல்வீர்.''

இதுகேட்டுமயங்கியமாலினியும் மங்கைமடமானும் முதலில் ஒருவரையொருவர் நோக்கிப் பின்னொருத்தி தன் தந்தையின் மேலும், மற்றொருத்தி தன் தநயன் மேலும் தனித்தனி நாட்டத்தைச் செலுத்தினார்கள். சுதஞ்சனைக்காக நெஞ்சழிந்த மால்வண்ணன் முகக் குறிப்புகள் மாறிமாறித் தோன்றின. சற்றே வெருவிச் சலித்த மனதினனாய் ஸ்ரீபாலனும், "கலங்கா வீர! கோடைகாலத்து முகிற்குலம் முடுகிவந்தாலும், ஆரவாரித்திடித்து மழைபெய்யாமற் போய்விடுவதுண்டு. அதேபோல் அரசாது ஆரவாரமும் இச்சமயம் அனைவருக்குந் தீங்கின்றி அடங்கிவிடவுங் கூடும். [அரசனது முனிவு முற்றும் என்னிடமே செலுத்தப் படுவதென்பதை நீ யறிவாய்] குமுறுறுகொண்டலின் உருமே றிழுக்கும் காந்தக் கருவிபோல் அவனது சீற்றத்தை இவ்விடமிழுக்க நான் இங்கிருக்கின்றேன். மால்வண்ண! நீ அரசனுக்குக் கீழ்ப்படிந்து போ! உனது நாடும் செல்வமும் அவன் கைப்பட்டிருப்பதாலும், முதிர்ப்பருவ மடையாத இளையோனுதலாலும் நீ வேறொன்றும் செய்வ தழகன்று. அரசன் உன்னிடம் கொண்ட கோபம் விரைவில் தணியும். உதிரம் சிந்திய உழுவைபோன்ற நானும் என் மகளும் வேடர் துரத்திய மானினம் என்னவிக் கானகத்திற் காணுவொரு முழையில் அடைக்கலம் புக்கு, இம்முழக்கமும் அரசனது ஆராய்ச்சியும் முடிந்தபின்னர் வெளிவருவோம்'' என்று புகன்றான்.

---

*சில அரும்பதங்களின் பொருள்:—விதர்ப்பு - வெற்றி. இசை - சொல், புகழ். கிளத்தி - பேசி. அசுழம் - நாய். கந்தரம் - கழுத்து. மதர்ப்புறு - களிப்புற்ற. வாரணம் - யானை. பருவரல் - துன்பம், பருப்பதம் - மலை. படுகர் - இறங்கியும் ஏறியும் செல்லும் வழி. விதிர்ப்பு - நடுக்கம். அணங்கு - அச்சம். நவ்வி - மான். வெண்டன்மை - கரவிலாமை. ககனம் - ஆகாயம். பிணிமுகம் - பறவை. கையாறு - துன்பம். அழுங்கல் - சோம்பல், அச்சம். அரிப்பரித்து - தெள்ளியெடுத்து. பழுவம் - காடு. புலால்நீர், செந்நீர், சோரி - இரத்தம். உழுவை - புலி.*

---


**கம்பராமாயணம்.** வை. மு. சடகோப ராமானுஜாசாரியார், கே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார்—பதிப்பு

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. பாலகாண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரண்யகாண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0 சுந்தரகாண்டம் ரூ. 5. (வி.பி. செலவுவேறு) கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.





## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

**கம்பராமாயணம்—பாலகாண்டம்**

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

**ஏமாங்கத் திளவரசன்**

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

**முருகன்—ஓர் உழவன்**

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

**திருக்குறள்**

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

**பெருமாள் திருமொழி**

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

**ஆறெழுத்தந்தாதி**

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

**நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனி, லிமிடெட்.**

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷ்யூரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர், பிராட்வே, சென்னை.

**ANCIENT JAFFNA**

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

**KALANILAYAM,**

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஒதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்லன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளைகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

**விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு**

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

**:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::**



## வர்த்தமானம்

**காலண்டர் வரவு:**—ரங்கூனில் பல ஆண்டுகளாகப் புத்தகவியாபாரம் செய்துவரும் நவீன கதா புத்தக சாலையார் அனுப்பிய 1930 வருஷக் காலண்டர் வரப் பெற்றோம். இது சுவரில் மாட்டிக்கொள்ளக்கூடிய அளவுடையது. தமிழ் இங்கிலீஷ் தேதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பக்கத்திலும் ஆன்றோர் அறவுரையும், ராகு குளிகைகாலங்களும் இருப்பது மிகப்பயனுடையதாகும்.

***

**இந்திய விடுதலை:**—இந்திய விடுதலை என்னும் தலைப்பின் கீழ் H. N பிரயில் போர்ட் என்னும் ஆங்கிலேயர், 'லீடர்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரைச் சுருக்கம் வருமாறு:—

"மெஸிடோனியா துருக்கியின் கையிலிருந்தகாலை மெஸிடோனிய இளைஞர் ஒரு பாட்டுப்பாடுவர். அப்பாட்டின் கருத்து துருக்கியுடன் போர்செய்து தங்கள் நாட்டினின்று அவர்களை அகற்றுவது என்பதே. மெஸிடோனிய மாதர் ஜலத்திற்குப்போகும் போதும், வீடுதிரும்பும்போதும், கடைத்தெருவிலும், மற்ற வெளியிடங்களிலும் இப்பாடலைப்பாடுவர். ஆண் பிள்ளைகளும் துருக்கி உத்தியோகஸ்தரைக் கண்ட போதெல்லாம் இப்பாடலைப் பாடுவர். ஆனால் இதன் பொருளைத் துருக்கியர் அறிந்தனர் இல்லை. லாகூர் காங்கிரஸும் அதில் தொண்டர்கள் நடந்து கொண்டதும் மெஸிடோனியர் செயலை ஒக்கும். பிரிட்டிஷாராகிய நாம் துருக்கியர் அல்லோம். லாகூர் காங்கிரஸ்செய்த முழுவிடுதலைத் தீர்மானம் நம்மை அறைகூவியழைக்கு மொன்றன்றாயினும், இந்தியா பிரிட்டிஷாருக்குச்செய்யும் எச்சரிகை அதுவென்பது தெரிதல் எளியதொன்றே. விடுதலை பெறுமுன் ஐயர்லாந்து போல் இரத்தம் சிந்தவேண்டுமோ இந்தியாவும் என்பது காங்கிரஸின்கேள்வி. இக்கேள்விக்குப்பிரிட்டன் பதிலளிக்கவேண்டும். இந்தியா அயர்லாந்து அன்றென்றும், அயர்ந்துக்கும் இந்தியாவிற்கும் வேற்றுமை உண்டென்றும் பலர் அபிப்பிராயப்படலாம். இருநாட்டிற்கும் வித்தியாசயம் இருக்கின்றது. அயர்லாந்தில் 80 பிரிட்டிஷாருக்கு ஒரு ஐரிஷ்காரர் இருந்தனர். இந்தியாவின்நிலைமையோவெனின், வேறுதான். காங்கிரஸ் கூறுவது இந்தியாவின் அபிப்பிராயமாவென்று சிலர் கேட்கின்றனர். காங்கிரஸ் இந்தியா முழுவதற்கும்பேசவில்லையாயினும், அதிகமான ஜனத்தொகையினரின் சார்பாகவே அது பேசுகின்றது.

காங்கிரஸ்கட்சியின் சமீப சரிதையையைக் கவனிப்போம். சுயராஜ்யம் தவிர மற்ற எதுவொன்றையும் ஒப்புக்கொள்வதில்லை யென்றும், அச்சுயராஜ்யத்தைப்பெற உயிரையும் விடுவதென்றும் இன்னும் காங்கிரஸ்காரர் முடிவுசெய்து விடவில்லை. காங்கிரஸ்காரர் சுயஆட்சி விஷயத்தில் ஒன்றுபட்டவரே யாயினும் குடியேற்றநாட்டு அந்தஸ்து கிடைப்பதாயின் அதைநிராகரிக்கமாட்டார்கள். சுயேச்சைப்பேச்சுவந்தபொழுது காங்கிரஸ்காரர் 1929-ம் வருஷ முடிவிற்குள் குடியேற்றநாட்டு அந்தஸ்து பிரிட்டிஷ் பார்லிமெண்டால் அளிக்கப்படுமேல் அதை ஒப்புக்கொள்வதென்று முடித்தனர். பிறகு ராஜப்பிரதிநிதி அறிக்கை வெளியிட்டார். காந்தி அடிகளும் பண்டிதர் நேருவும் மற்ற செல்வாக்குள்ள தலைவர்களும், குடியேற்றநாட்டு அந்தஸ்து அளிப்பதாயின் ஏற்றுக்கொள்வதென்று அறிக்கை வெளியிட்டனர்.

அறிக்கையில் காங்கிரஸ்காரர்கள் கூறியபடி அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. பார்லிமெண்டுவிவாதத்தில்நடந்தநிகழ்ச்சிகள் இந்தியரின்நம்பிக்கையை அகற்றிவிட்டன. பர்க்கன்ஹெட்டும், ஓட்வியரும் செய்யும் கிளர்ச்சியும், பார்லிமெண்டுவிவாதமும், கன்சர்வெட்டிவ் மனப்பான்மையும் இந்திய விடுதலை இயக்கத்தைவலுப்படுத்திவிட்டன. ஆகவே காந்தியடிகள் சர்வகட்சிமஹாநாட்டைப் பகிஷ்கரித்தார் என்றாலும் செல்வாக்குள்ள வேறுசில அரசியல் கட்சியினர் மஹாநாட்டிற்கு வருவர். வரிகொடா இயக்கம் தொடரப்படும் என்றும் பயம் காட்டப்படும். என்றாலும் நமக்கு வழியிருக்கிறது. இந்தியாவுடன் இராஜி ஏற்பாடு செய்துகொள்ளத் தொழிற்கட்சியார் இந்தியா குடியேற்றநாட்டு அந்தஸ்தைப் பெறுமாறு செய்ய வேண்டும். மாகாண அரசாங்கத்திலும் மத்திய அரசாங்கத்திலும் இந்தியருக்குச் சகல உரிமையும் கொடுத்து விடவேண்டும். இராணுவத்திலும் இந்தியர் தொகை பெருகவேண்டும். இங்ஙனம் செய்யின் ராஜி ஏற்படும். காங்கிரஸ்காரர்களும் ராஜிக்குவருவர். ஆகவே சர்வகட்சி மஹாநாட்டிற்குவரும் இந்தியர்களைத் திருப்தி செய்துவைக்க வேண்டும். அவ்வண்ணம் செய்யாவிடில் தொழிற்கட்சி கவர்ன்மெண்டாயினும் அதை நாம் எதிர்க்கவேண்டும்.

இன்று இல்லாவிடினும் ஒருநாள் சுயராஜ்யம் இந்தியா பெறும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. நாம் கண்ணியமான வழியில் நடப்பதே முறை. அடக்குமுறையால் ஒரு நாட்டாரைப் பல நாள் வரை அழுத்திவைக்க முடியாது. தொழிற்கட்சிக் காவர்ன்மெண்டார் சரியான பாதையில் நடக்கத் தவறுவாரேல், தொழிற்கட்சியில் பிளவு ஏற்படும். இந்தியாவிற்கு விரோதமான மற்றக் கட்சியாரோடு தொழிற்கட்சியார் சேரலாகாது. அப்படிச் செய்யின் கண்ணியமுள்ள தொழிற்கட்சியாரான நாம் அக்கட்சிக்கு ஆதரவு தரமுடியாது.

18909


## "ப்ரேமவல்லி"

அல்லது

**பயங்கர ரகசியம்**

**By**

**Mrs. D. N. Sundaram.**

**இது ஓர் சிறந்த துப்பறியும் நாவல்.**

துப்பறியும் விஷயத்தில் மிகவும் சிறந்ததாகித் துப்பறிபவள் மிக்க புத்தி சாதுர்யத்துடன் பல வேலைகள் செய்துவருவது, மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. இது படிக்கப்படிக்க மிக்க இன்பத்தைத் தரும். இன்னும் என்னவருமோ எப்படியாகுமோ வென்று படிப்போரின் மனத்தைக் கவரும் தன்மையுடையது. விலை ரூபா **0 14 0**

இப்புத்தகம் கிடைக்கும் இடம்.

**Mrs. D. N. SUNADARAM.**

16. வடகூர் செல்வவினயகர்கோவில் தெரு,
மைலாப்பூர், சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


# OUR OWN PUBLICATIONS

**THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA** Vol. 1. 1542-1614

*by* THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

**THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES**

*by* K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

**THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905**

*by* POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

**ECONOMIC DEVELOPMENT:**

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

**LIFE OF BARRISTER SAVARKAR**

*by* CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1.8**

**HINDU-PAD-PADASHAHI:**

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

**ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA**

*by* V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

**LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION**

*by* MANGALVEDKAR, 3rd revised edn. **Rs. 2**

**DIALOGUE DIVINE AND DRAMATIC**

*by* GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்ரும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. வலிவிக்ஸ் தாரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பாசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பசீ்தன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்-S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II „ **As. 4.**
23. Book III „ **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

**(V. P. Charges, Extra of the Prices.)**

**B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)